Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2036 தை-28 10-02-2005 வியாழக்கிழமை ஓசை -358



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி. வவுனியா. T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(சி-11251)

# கௌசல்யன் மற்றும் போராளிகளுக்கு

# தமிழ் மக்கள் அணிதிரண்டு அஞ்சலி!

## கிழக்கில் பூரண கதவடைப்பு தமிழர் தாயகம் எங்கும் சோகம்

(மட்டக்களப்பு)

**படுகொலை செய்யப்பட்ட மட்டு -அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் அவர்களுக்கும் ஏனைய போராளிகளுக்கும் மட்டு- அம்பாறை மக்கள் பெருமளவில் அணி திரண்டு அஞ்சலி செலுத்தினர். இதேவேளை இப்படுகொலைச் சம்பவத்தைக் கண்டித்து நேற்று கிழக்கு மாகாணத்தில் பூரண கதவடைப்பும், பணிப்புறக்கணிப்பும் இடம் பெற்றது. இதே சமயம் வடக்கிலும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டும், சோக கீதங்கள் இசைக்கப்பட்டும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.**

நேற்றுக் காலை வரை வீடுகளில் வைக்கப் பட்டிருந்த இவர்களின் வித்துடல்கள், பொதுமக் களின் அகவணக்கத்திற்காக கொக்கட்டிச் சோலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு இராம கிருஸ்ண மிஷன் பாடசாலை மண்டபத்தில் பொது மக்களின் அகவணக்கத்திற்காக வைக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்து பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பொதுமக்களின் அகவணக்கத்திற்காக வைக் கப்பட்டது. பொதுமக்களின் அகவணக்கத்திற் காக வைக்கப்பட்டிருந்த வித்துடல்களுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பாகங்களிலு மிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் சென்று தமது இறுதி வணக்கத்தை செலுத்திக் கொண் டிருக்கின்றனர். மக்களின் முகங்களில் தாழமுடியாத சோகத்தையும், துயரத்தையும் காணக்கூடியதாக உள்ளது. இம்மாவட்டம் முழுமையாக சோகத்தில்

(12ஆம் பக்கம் பார்க்க)





## தாண்டியடி துயிலுமில்லத்தில் வித்துடல்கள் விதைக்கப்படும்!

பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்த சம்பவத்தில் வீரச்சா வைத் தழுவிக்கொண்ட விடு தலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் இ.கௌசல்யன் உட்பட நான்கு போராளிகளின் வித்துடல் கள் இன்று மாலை மட்டக்களப்பு தாண்டியடி மாவீரர்கள் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படவுள் ளன

- 36மணி நேரத்தின் பின் -

## சந்திரநேருவின் சடலம் உறவினரிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)



வெலிக்கந்தப் பிரதேசத்தில் துப்பாக் கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்டவர்களுள் ஒருவரான முன்னாள் பாராளுமன்ற உறுப் பினரும். நாட்டுப்பற்றாளருமான அரியநாயகம் சந்திரநேருவின் மரண விசாரணை நடை பெற்றதையடுத்து (12ஆம் பக்கம் பார்க்க)

## படுகொலைகளைக் கண்டித்து வாகரையில் இன்று பேரணி

கடந்த 07.02.05 அன்று பொல நறுவை வெலிக்கந்தப்பகுதியில் படு கொலை செய்யப்பட்ட மட்டு-அம்பாறை அரசியல் துறை பொறுப்பாளர் இ.கௌசல்யன் மற்றும் போராளிகளின் கொலை களைக் கண்டித்துவாகரைப் பகு தியில் இன்றைய தினம் கண்ட னப் பேரணி ஒன்று நடைபெற வுள்ளது.இப்பேரணிகள் இரண்டு இடங்களில் இருந்து ஆரம்ப மாகும் முதலாவது பேரணி பி.ப 2 மணிக்கு பனிச்சங்கேணிப்ப குதியில் இருந்து ஆரம்பமாகி வாகரைப் பிரதேசசெயலகத் தைச் சென்றடையும் எனவும் மற் றைய பேரணி கதிரவெளி

(12ஆம் பக்கம் பார்க்க)

## கௌசல்யன் படுகொலைக்கு ஐ.நா. சபை கண்டனம்!

விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யனின் படுகொலையை ஐக்கிய நாடுகள் சபை கண்டித்துள்ளது.

ஐ.நா.சபை நேற்று விடுத்துள்ள இந்தக் கண்டன அறிக்கையில், கௌசல்யன் படுகொலையைக் கண்டித்திருப்பதுடன் சமாதான முயற் சிகளைச் சீர்குலைக்கும் வகையிலான நடவடிக்கைகளை நிறுத்தும் படியும் செயலாளர் நாயகம் கொபி அனான் வேண்டுகோள் விடுத்துள் ளார். அமைதியையும் கட்டுப்பாடுகளையும் சீர்குலைக்கும் நடவடிக்கை களைத் தடுக்கும்படி கோரியுள்ள அனான், படுகொலைச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங் களையும் தெரிவித்துள்ளார்.

-தமிழ்ச்செல்வன், தமிழேந்தி உள்ளிட்ட-

## புலிகளின் முக்கியஸ்தர்கள் மட்டக்களப்பு பயணம்!

(அலுவலக செய்தியாளர்)

பொலநறுவை மாவட்ட வெலிகந்தப் பகுதியில் வைத்து துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி வீரச்சாவடைந்த மட்டு-அம்பாறை மாவட்டஅரசியல் துறைப் பொறுப் பாளர் லெப். கேணல் கௌசல் யன் உட்பட போராளிகளின் வீர வணக்க நிகழ்வில் கலந்து கொள் ளும் பொருட்டு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் உள்ளிட்ட புலிகளின் முக்கியஸ்தர்கள் நேற்று மட்டு.பயண மாகினர்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு கிளிநொச்சியிலிருந்து சிறிலங்கா வான்படைக்குச் சொந் தமான உலங்குவானூர்தி மூலம் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள், தமிழீழ நிதித்துறை பொறுப் பாளர் தமிழேந்தி, மட்டு -அம் பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு, விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சபாநாயகர் ஆசனம் முன்அமர்ந்து த.தே.கூ.உறுப்பினர்கள் எதிர்ப்பு

- தொடர்ந்த அமளிதுமளியால் சபை ஒத்திவைப்பு

(கொழும்பு)

லெப்.கேணல் கௌசல்யன் உட்பட போராளிகளினதும், நாட் டுப்பற்றாளர் சந்திரநேரு அரியநா யகம் அவர்களினதும் கொலை களுக்கு கண்டனம் தெரிவித்து தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் பாராளுமன்றத்தில் சபாநாயகரின் ஆசனத்திற்கு முன் அமர்ந்து தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இதனையடுத்து பாராளு மன்றத்தில் அமளிதுமளிஏற்பட்டது. இதனால் சபை ஒத்திவைக்கப் பட்டது.

பாராளுமன்றம் நேற்றுக்கூடிய போது வருகை தந்திருந்ததமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் உறுப்பி னர்கள் கறுப்புப்பட்டி அணிந்தி ருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் பாராளுமன்ற நடவ டிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு சிறிது நேரத்தில் சபாநாயகரின் ஆசனத் திற்கு முன்னாள் அமர்ந்து கௌசல் யன் உட்பட்டோரின் படுகொலைக் குத் தமது எதிர்ப்பைத் தெரிவித் துள்ளனர்.

இதன்பின்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தமது ஆசனத்தில் அமர்ந்ததை

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிளியில் லெப்.கேணல் கௌசல்யன் உட்பட ஐவரின் நினைவுக் கூட்டம் நாளை

–15 ஆம் திகதி கண்டன நிகழ்வு

(கிளிநொச்சி)

மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உட்பட 4 போராளிகளினதும், நாட்டுப் பற்றாளர் சந்திரநேரு அரியநாயகத்தினதும் வீரவணக்கம் கிளி.மாவட்டத்தில் ஏழு இடங்களில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது. அத்துடன் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இக்கொலைகளைக் கண்டித்து எதிர்ப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது.

நேற்றுப் பி.ப.4 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் வெகுசன அமைப்புக்களின் உபதலைவர் இ.கணேச பிள்ளை தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத் தில் இத்தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. வீரவணக்க நிகழ்வுகள் பின்வரும் ஒழுங்கின்படி நாளை காலை 9.30 மணிக்கு நடாத்துவதாக தீர்மானிக்கப்பட்டுள் ளது.

கிளிநொச்சிப் பிரதேசம்-பண்பாட்டு மண்டபம், வட்டக்கச்சி- மாவீரர் மண்டபம், அக்கராயன்- இல1

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

பெ.புண்ணியராஜ் என்பவரது 269741என்றஇலக்கமுடைய காசோலை (த.வைப்பகம்) பரந்தனுக்கும் பூநகரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து லெப்.கேணல் நவம் அறிவுக் கூடத்திலஓப்படைக்கவும் (5712)

### தவறிவிட்டது

வேலுப்பிள்ளை இராச மாணிக்கம் என்பவரது 64283375 V எனும்இலக்கமுடைய தே.அ.அ. யோகபுரம் மத்திய பகுதியில் தவறிவிட்டது.இதனைக்கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மல்லாவி ஈழநாதம் விளம்பரப்பணி மனையில் ஒப்படைக்கவும். (4148)

### 5ஆம்ஆண்டிற்கான விசேட பரீட்சை

புலமைபரிசில் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சைகள் கேம்பிறிச் கல்லூரியில் நடைபெறுகின்றன.சகல மாணவர்களும் கலந்துகொள்ள முடியும். ஒவ்வொரு ஞாயிறும் 1-3 மணிவரை 25பரீட்சைகள் நடைபெறும். வினாத்தொகுப்புஅம்பிகை பாகன் (கொழும்பு) கேம்பிறிஜ் கல்லூரி, உதயநகர். (5480)

### இந்து நாகரிகக் கருத்தரங்கு

2005 இல் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கானது. பதிவுகளை முன்கூட்டியே பதிவு செய்யவும். கேம்பிறிச்கல்லூரியில் 12.02.2005 அன்று சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு உதயநகர் கிளிநொச்சியில் ஆரம்பமாகும். ஆசிரியர் S.ரமேஸ் (B.A) (11401)

## 47 நாள் நினைவஞ்சலி

### திருமதி. தங்கவேல் பரமேஸ்வரி



அன்னை மடியில் 22 10 1961

கடலன்னைமடியில் 26 12 2004

எமது பணிமனையில் கடமை புரிந்த திருமதி மகேஸ்வரன் தர்மவேணி அவர்களின் அன்புத் தாயாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

நீர்ப்பாசன பொறியியலாளர்,
பணிமனை,
முத்துஜயன்கட்டுப் பிரிவு,
ஒட்டுசுட்டான்.
(5681)

## சாவு அறிவித்தல்



### நவரட்ணம் மகேஸ்வரி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும்,கிளிநொச்சி திருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட நவரட்ணம் மகேஸ்வரி 09.02.2005 நேற்று காலமாகிவிட்டார். இவர்காலம் சென்ற நவரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், காலம் சென்ற சந்திராதேவி, புஸ்பராணி, இந்திராணி, காலம்சென்ற சந்திரகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நிர்மலா, நித்தியராஜா (பிரான்ஸ்), அருள்ராசா, அற்புதராசா, மரியராணி, ஜெயராணி, ஞானசேகர், ராஜ்மோகன், தேவராசா (தேவன்,பிரான்ஸ்), யுவராணி, (பொருண்மிய மதியுரையக பணியாளர்), யுவராஜ் (தமிழீழ எழுச்சிப் பாடகர்), ஜெயராஜ்,காலஞ்சென்ற வசந்தராசா, ஆகியோரின் அன்புத்தாயாரும் ,கணேஸ்வரன், செல்வராசா, மித்திரகுமார், கோல்டன் கிறிஸ்ரி,ஈஸ்வரி (பிரான்ஸ்), மஞ்சுளா, இந்திரா, பிரியா, ஆகியோரின் மாமியாரும், சந்திரகுமார் (த.பொ.மே.நிறுவனப்பணியாளர்) ஜெயதர்சினி (பொருண்மிய மதியுரையகம் பணியாளர்), சுகிர்தா (இந்தியா), மேரிதிரேஸா, அஜந்தன் (முல்லை, வித்தியானந்தாக் கல்லூரி, வினோத (கிளிநொச்சி இந்துக்கல்லூரி மாணவன்), நிரோசா (கனகபுரம் மகாவித்தியாலய மாணவன்), ஜென்சி ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் இன்று (10.02.2005) மாலை 4.00 மணிக்கு திருநகர் சேமக் காலையில் நடைபெறும்

தகவல்:-
யுவராஜ் மகன்

(சி.11414)

## தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடங்கள்

**1. உபபரிசோதகர் :-**

க.பொ.த. (உயர்தரம்) சித்தியடைந்திருந்தல் வேண்டும். வயதெல்லை 18-30 வரை ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

சம்பளம் :-

$$\frac{4500}{150} \frac{+}{\times 10} \frac{7155}{+ 165 \times 7} + 2700$$

**2. எழுதுவினைஞர் :-**

க.பொ.த. (உயர்தரம்) சித்தியடைந்திருந்தல் வேண்டும். அல்லது க.பொ.த. (சாதாரணம்) சித்தியுடன் ஐந்து (5) பாடங்களில் தமிழ்மொழி உட்பட திறமைச்சித்தியடைந் திருத்தல் வேண்டும்.
வயதெல்லை 18-30 ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

சம்பளம் :-

$$\frac{4200}{125} \frac{+}{\times 10} \frac{6430}{+ 140 \times 7} + 2700$$

**3. காவலர் :-**

க.பொ.த. (சாதாரணம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும். வயதெல்லை 18-30 வரை. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

சம்பளம் :-

$$\frac{4200}{125} \frac{+}{\times 10} \frac{6430}{+ 140 \times 7} + 2700$$

மேற்படி பதவிகளில் இணைய விரும்பும் விண்ணப்பதாரர்கள் கிளிநொச்சியில் அமைந்துள்ள காவல்துறை நடுவப்பணியகத்துக்கு எதிர்வரும் 2005.02.10 முதல் 2005.02.28 ஆம் நாள்வரை காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை சான்றிதழுடன் நேரில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

ஆளணிப்பிரிவு,
காவல்துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்.
(5715)


## சூரிய வாஹினி சூரிய மின்வலுத்தொகுதி

### வாழ்க்கைக்கு வெளிச்சம்



எமது நிறுவனசேவைகளுடன் இணைந்த சேவையாக உயர்தரத்திலான சூரிய மின்கலங்கள் கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு விநியோகித்து வருகின்றோம்.

உத்தரவாதப் பத்திரத்துடன் விற்பனைக்குப் பிந்திய சேவையும், பயிற்றப்பட்ட தொழில் நுட்பவியலாளர்களின் மேற்பார்வையும் வழங்கப்படும்.

| மின்கல விபரம் | பனல் விபரம் | பற்றரி (மின்கலம்) |
|---|---|---|
| 03.லைற் | 30wp-[வோல்ட் பவர்] | 80ABH [அம்பயர்] |
| 04.லைற் | 35wp-[வோல்ட் பவர்] | 60ABH [அம்பயர்] |
| 05.லைற் | 40wp-[வோல்ட் பவர்] | 80ABH [அம்பயர்] |
| 07.லைற் | 60wp-[வோல்ட் பவர்] | 100ABH [அம்பயர்] |

தொடர்புகளுக்கு தொலைபேசி இலக்கம்-0212285074
கரைச்சி வடக்கு பலநோக்கு கூ.சங்கம், பரந்தன்,
கி...நொச்சி, முல்லைத்தீவு, விநியோகஸ்தர்,
தலைமை அலுவலகம், பரந்தன்,
கிராமிய வங்கி-முல்லைசாலை, தருமபுரம்.

சூரியவா -ஹினி
பிறைவேற் லிமிட்டெட்
கொழும்பு-07

(சி.11323)


## 41 ஆம் நாள் நினைவலைகள்



தாயின் மடியில் 08 07 1991 கடலின் மடியில் 01 01 2005

### அமரர்
### சிவகிருபைலிங்கம்-கருணா

கள்ளப்பாடு தெற்கு, முல்லைத்தீவு.

அன்னையின் அரவணைப்பில் 14 வருடம் வாழ்ந்த-செல்வமே
ஆழிப்பேரலை உன்னை அள்ளிச் சென்றதுவே
அம்மா அப்பா கதறித்துடிக்க சகோதரர் துயரில் மூழ்க
ஆழிப்பேரலை உன்னைக் காவு கொண்டதுவோ
ஆற்றாது துயரில் துடிக்கின்றோம். ஒரு முறை வாராயோ.....

கடந்த 26.12.2004 அன்று சுனாமியினால் தாக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காத நிலையில் 01.01.2005 வைத்தியசாலையில் சாவடைந்த எமது தெய்வத்தின் 41 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியை இன்று (10.02.2005) நடைபெறுகின்றது.

கள்ளப்பாடு தெற்கு,
முல்லைத்தீவு.

தற்காலிக முகவரி:-
நலன்புரிநிலையம்
வித்தியானந்தாக்கல்லூரி,
முள்ளியவளை.

என்றும் பிரிவால்
வாடிநிற்கும் அன்பு
அம்மா,அப்பா,சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

(5481)

# பசுபிக் கடல்பகுதியில் இரு நாடுகளை உலுக்கிய பூகம்பம்
# சுனாமி தாக்கப் போவதாக பயந்து மக்கள் ஓட்டம்

## சுமாத்திரா தீவுப் பகுதியிலும் நேற்று அனர்த்தம்

(சிட்னி)

**பசுபிக் கடல் பகுதியில் நேற்று அதிகாலை பூகம்பம் ஏற்பட்டது. இதையடுத்து சுனாமி அலைகள் உருவாகும்என்ற அச்சத்தில் வகாட்டோ மற்றும் பப்புவாநியூகினியா நாடுகளின் மக்கள் கரையோரங்களை விட்டு வெளியேறினார்கள்**

பசிபிக் கடலின் தென் மேற்கு பகுதியில் உள்ளது வகாட்டோ.93 தீவுகளை கொண்டது இந்த நாடு. இதன் தலைநகர் போர்ட் விலாவுக்கு வடமேற்குப் பகுதியில் இந்த பூகம்பம் மையம் கொண்டு இருந்தது. ரிச்டர் அளவில் இந்த பூகம்பம் 6.7 புள்ளிகளாகப் பதிவானது. ஆனாலும் கடலுக்கு அடியில் இந்தப் பூகம்பம் ஏற்பட்டதால் நிலப்பகுதிகளில் அதிக அளவு சேதம் ஏற்படவில்லை.

பூகம்பம்தாக்கிய தகவல் வெளியானதைத் தொடர்ந்து பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியே அலறி அடித்துக்கொண்டு ஓடினார்கள். பூகம்பத்தை தொடர்ந்துதான் சுனாமி [illegible]லைகள் உருவாகிப் பெரும் சேதத்தை ஏற்படுத்துவ[illegible] வழக்கம். ஆசிய நாடுகளில் பூகம்பத்தைத் தொடர்ந்து சுனாமி பேரலைகள் தாக்கியதை எந்த நாடுகளுமே இன்னும் மறக்கவில்லை.

எனவே கடலோரப் பகுதிகளில் உள்ளவர்கள் அனைத்தையும் அப்படியே போட்டு விட்டு நகரில் உயரமான பகுதிகளுக்கு ஓடிவிட்டனர். இந்தப் பரபரப்பையும் குழப்பத்தையும் கட்டுப்படுத்த முடியாமல் பொலிசார் தவித்தார்கள்.


இதே போல பப்புவா நியூகினியா நாட்டிலும் பூகம்பம் ஏற்பட்டது. தாழ்வான பகுதிகளில் உள்ளவர்கள் வீடுகளை விட்டு ஓடினார்கள். கடலில் சாதாரண அலைதான் வீசியது. ஆனாலும் அவர்கள் கண்ணுக்கு அது சுனாமி பேரலைகள் போல் தென்பட்டது. இந்தப் பூகம்பம் 6.1 ரிச்டர் அளவில் பதிவானது.

இந்த பூகம்பம் தரைமட்டத்தில் இருந்து 200 கி.மீ. ஆழத்தில் உருவானதால் சுனாமி பேரலைகளை அது எழுப்பவில்லை என்று நிபுணர்கள் கூறியுள்ளனர்.

நேற்று இந்தோனேஷியாவின் சுமாத்திரா தீவுப்பகுதியிலும் பூகம்பம் ஏற்பட்டது. அதிகாலை 6.32 மணிக்கு மேற்குக் கடற்கரைப் பகுதியில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் 5.1 ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளது. இதில் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

# பெருவில் சிறைச்சாலைக்குள் மோதல் ஐந்து கைதிகள் பலி; 25 பேர் காயம்!


தென் அமெரிக்க நாடான பெருவில் லிமா நகரிலுள்ள சிறைச்சாலை யொன்றில் கைதிகளுக்கிடையே இடம் பெற்ற துப்பாக்கிச் சண்டையில் ஐவர் கொல்லப்பட்டனர். மேலும் 25 பேர் காயமடைந்தனர்.லிமா நகரில் மிகப்பெரிய சிறைச் சாலை உள்ளது. இங்கு எண்ணாயிரத்துக்கு மேற்பட்ட கைதி கள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். கடத்தல்



மோதல் நடைபெற்ற போது

கொலை, கொள்ளை, போதை கும்பலுடன் கோடீஸ்வரர்கள் சிலரும் இங்கு உள்ளனர். இந்த சிறையில் கைதிகளுக்கிடையே கோஷ்டி மோதல் ஏற்பட்டது. துப்பாக்கியால் ஒருவருக்கொருவர் சுட்ட னர்.

இந்தத் துப்பாக்கிச் சண்டையில் ஐந்து கைதிகள் பலியானார்கள். 25 பேர் காயம் அடைந்தனர். சிறை அதிகாரி களுக்கு லஞ்சம் கொடுத்து மாபியா கும்பல் துப்பாக்கி, போதைப் பொருள் போன்றவற்றை சிறைக்குள் கடத்திவந்து இருப்பது விசாரணையில் தெரிய வந்துள்ளது. கடந்த வாரம் இதே சிறைக்குள் உளவுப்படை அதிகாரி ஒருவரை மாபியா கும்பல் சுட்டுக் கொன்றது குறிப்பிடத்தக்கது.



ஈராக்கின் சிர்குக்கில் ரொக்கெட் தாக்குதலுக்குள்ளான எண்ணெய்க் குழாய் தீப்பற்றி எரிகிறது.

# கியூபாவில் பொது இடங்களில் புகை பிடிக்கத் தடை

(ஹவானா)

புகையிலை உற்பத்திக்கும். சுருட்டு தயாரிப்புக்கும் புகழ் பெற்ற கியூபா நாட்டில் பொது இடங்களில் புகை பிடிக்க அந்த நாட்டு அரசு தடை விதித்து உள்ளது.

குளிர்பதனம் செய்யப்பட்ட இடங்கள், அலுவலகங்கள், பள்ளிக்கூடங்கள், விளையாட்டுத் திடல்கள் ஆகிய இடங்களில் புகை பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கியூபா நாட்டில் 50 சதவீதத்துக்கும் மேற்பட்ட ஆண்கள் புகை பிடிக்கும் பழக்கம் உள்ளவர்கள்.

# மாவோ தீவிரவாதிகள் – அரசியல் கட்சிகள் இணைந்து
# நேபாளத்தில் மன்னர் ஆட்சிக்கு முடிவுகட்டத் தீர்மானம்!

## இருவாரங்களில் போராட்டம் ஆரம்பம்

(காத்மண்டு)

நேபாளத்தில் மன்னர் ஆட்சிக்கு முடிவு கட்ட மாவோ தீவிரவாதிகளுடன் அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து இரு வாரத்தில் போராட்டம் தொடங்க முடிவு செய்துள்ளன. நேபாளத்தில் பிரதமர் ஷேர்பகதூர்தாபா தலைமையில் இருந்த மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட சனநாயக அரசை மன்னர் ஞானேந்திரா பதவிநீக்கம் செய்து ஆட்சி அதிகாரத்தை தானே கைப்பற்றியிருந்தார். அத்தோடு தனக்குக் கீழ் பத்து அமைச்சர்களை மன்னர் ஞானேந்திரா நியமித்தார்.

நாட்டில் நெருக்கடி நிலையை அமுற்படுத்தி அரசியல் கட்சித் தலைவர்களை கைது செய்தார். சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் பொறுப்பை இராணுவத்திடம் ஒப்படைத்தார். கைதுக்கு தப்பிய பல தலைவர்கள் நேபாளத்தில் இருந்து தப்பி இந்தியா வந்தனர். அப்படித் தப்பி மேற்கு வங்காள மாநிலம் வந்தவர்களில் ஒருவர் நேபாள காங்கிரசின் ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் கிருஷ்ண பிரசாத்சித்தோலா. அவர் சிலிகுரி நகரில் அளித்த பேட்டியில் கூறியதாவது, முன்னாள் பிரதமரும், நேபாள காங்கிரஸ் தலைவருமான கிரிஜாபிரசாத் கொய்ரால மாவோ தீவிரவாதிகளுடன் சமரச பேச்சுவார்த்தை நடத்தி நேபாளத்தில் அமைதி ஏற்படுவதற்கான உடன்பாடு காணும் நிலையில் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட அரசை மன்னர் ஞானேந்திரா பதவிநீக்கம் செய்து நாட்டில் நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்தார். அரசியல் கட்சித் தலைவர்களை கைது செய்தார். நேபாள காங்கிரசின் ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்



தலைநகரில் பாதுகாப்பு

களில் 10 பேர் மட்டும் தான் கைது நடவடிக்கைக்கு தப்பினார்கள். அவர்களில் பெரும்பாலானோர்கள் அங்கிருந்து தப்பி இந்தியா வந்து விட்டனர்.

நேபாளத்தில் மன்னர் ஆட்சியை ஒழிக்க அவர்கள் இங்கு ஆதரவு திரட்டி வருகிறார்கள். நேபாளத்தில் மன்னர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வர அனைத் துக் கட்சிகளும் மாவோ தீவிரவாதிகளுடன் இணைந்த இரு வாரத்தில் ஒரு இயக்கத்தை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அதே சமயம் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்று மாவோ தீவிரவாத இயக்கத்துக்கு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. இந்த இயக்கம் மூலம் நேபாளத்தில் மன்னர் ஆட்சிக்கு முடிவு கட்டப்படும் என்று கூறினார்.

# சீன–அமெரிக்க இரு தரப்பு பேச்சுக்கள் இணக்கப்பாடு எதுவுமின்றி முடிவுற்றது!


## ஆயுத பலம் அதிகரிப்பதையிட்டும் அமெரிக்கா கவலை

தாய்வான் விவகாரம் சம்பந்தமாகவும் நெருக்கடி நிலைமை முகாமைத்துவம் சம்பந்தமான பிரச்சினை தொடர்பாகவும் அமெரிக்காவும் சீனாவும் கடந்த வாரம் நடத்திய பாதுகாப்பிற்கு உட்பட்ட பேச்சு வார்த்தைகள் வெற்றியளிக்கத் தவறியுள்ளன.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது இருதரப்பினருக்குமிடையே கருத்து வேறுபாடுகள் நீக்கப்படவில்லை ஓகடல் மற்றும் ஆகாயமார்க்க அவசர நிலைமைகள் ஏற்படும் போது இருதரப்பினரும ஒத்துழைப்பை மேற்கொள்ளுவது தொடர்பான இணக்கப்பாட்டிலுள்ள முட்டுக்கட்டை நிலைமைகள் இந்தப் பேச்சுவார்த்தையின் போது நீக்கப்படவில்லை சீனாவும் அமெரிக்காவும் மார்ச் அல்லது ஏபரல் மாதத்தில் வோஷிங்டனில் மேலும் இராணுவம் சம்பந்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை நடத்த இணங்கியுள்ளது.

இது இவ்வாறிருக்க அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் பல அழைப்புக் களையடுத்து சீனாவுக்கு இந்த ஆண்டு விஜயம் செய்ய கொள்கையளவில் இணங்கியுள்ளார்.

இதேவேளை சீனா அதன் ஆயுதபலத்தை தொடர்ந்து அதிகரிந்து வருகின்ற தென் அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது.



ஐ.நா பாதுகாப்புச் சபையில் பேச்சு நடத்திவிட்டுத் திரும்பிய சூடானின் டார்பர் பிராந்திய தீவிரவாத குழுத்தலைவர் உரையாற்றுகின்றார்.



படத்தில் நீங்கள் பார்ப்பது பிரிட்டனைச் சேர்ந்த 28 வயது இளம் பெண் எலென் மெக் ஆர்தர். தன்னந்தனியாளாக சிறிய படகில், 71 நாட்களில் கடல் வழியாக உலகைச் சுற்றி புதிய சாதனை படைத்திருக்கிறார் பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் கடல் எல்லையைப் பிரிக்கும் பகுதியில் இருந்து நவம்பர் 28 ஆம் திகதியில் புறப்பட்டிருந்தார்

# வடக்குக் கிழக்கில் கொலைகளை நிறுத்த

# சர்வதேசம் சிறி.அரசுக்கு அழுத்தம் கொடுக்குக

## வடக்குக்கிழக்கு மனித உரிமைகள் செயலகம் அறிக்கை

**மட்டு. அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட விடுதலைப்புலி உறுப்பினர்களும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு அரியநாயகம் ஆகியோர் பொலநறுவ-வெலிக்கந்தையிலுள்ள நாமக்கல் பிள்ளையாரடி என்ற இடத்தில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டதற்கு வடக்குக்கிழக்கு மாகாண மனித உரிமைகள் செயலகம் தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளதோடு வடக்குக்கிழக்கில் கொலைகளை நிறுத்தவும், மனித உரிமைகளைப் பேணவும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு சர்வதேச சமூகம் ஆகக்கூடிய அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளது.**

அந்த அமைப்பின் தலைவர் வண. கருணாரட்ணம் அடிகளார் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்திரநேரு அரியநாயகம் மனித உரிமைகள் குழுவின் சிறந்த சட்டத்தரணி. கிழக்கு மாகாணத்தில் பெறும் மனித உரிமை மீறல் தொடர்பில் அவர் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தவர் என்றும் தெரிவித்துள்ளது. இந்த அமைப்பும் தானும் இந்த விடயத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு சக்தியாக அவரை நம்பியிருந்ததாகவும் கடந்த 7ஆம் திகதி சுனாமி பாதிப்புக்குள்ளானவர்கள் தொடர்பாக ஆழமான உரையாடல் ஒன்றை நடத்தியதாகவும் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் மனித உரிமைகள் தொடர்பாக நிறையப் பணியாற்றிய இவர், துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகியமை சோகமுடிவாகும்.

இது தொடர்பாக சர்வதேச அமைப்புக்கள் சிறிலங்கா அரசுக்கு பெரும் அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும். கொலையாளிகளை இனங்கண்டு அவர்களை நீதியின் முன் நிறுத்தவேண்டும். இதுபோன்ற செயல்களில் ஈடுபடும் பரா இராணுவத்தினரிடமிருந்து ஆயுதங்களைக் களைய வேண்டும். இது சமாதானத்தையும் இயல்பு வாழ்வையும் விரும்பும் மக்களுக்கு நல்ல அறிகுறியல்ல. மனித உரிமைகள் அமைப்புகள் இந்தச் சூழ்நிலையில் இயங்க முடியாது.

இப்பிரதேச வாழ் மக்களும் மனித உரிமை செயலகமும் இந்தக் கொலைக்கு கண்டனத்தைத் தெரிவிப்பதுடன் அவர்களின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சி கச்சேரிக்கு முன்பாக

# ஏ-9 வீதியில் விபத்து உந்துருளியில் வந்தவர் படுகாயம்




(அலுவலக செய்தியாளர்)

ஹண்டர் பாரவூர்தி உந்துருளியுடன் மோதியதில் உந்துருளியில் பயணித்தவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் கிளி மாவட்ட வைத்தியசாலையில் அவசர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டதன் பின் மேலதிக சிகிச்சையின் பொருட்டு மாவட்ட வைத்தியசாலை அம்பியூலன்ஸ் வண்டி மூலம் யாழ்.போதனாவைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் 12.45 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்திற்கருகாமையில் ஏ9 பிரதான சாலையில் இடம்பெற்றுள்ளது. ஏ9 நெடுஞ்சாலையூடாக கரடிப்போக்கு நோக்கிப் பயணித்த ஹண்டர்ரக பாரவூர்தியானது ஏ9 நெடுஞ்சாலையிலிருந்து பழைய புகையிரத வீதிநோக்கித் திரும்பிய உந்துருளியுடன் மோதியதில் உந்துருளியில் பயணித்தவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

ஜெயபுரம் பல்லவராயன் கட்டைச்சேர்ந்த விக்கினேஸ்வரன் சசிகுமார் (வயது 30) என்பவரே மேற்படி சம்பவத்தில் படுகாயமடைந்தவராவார்.

விபத்துக் குறித்து தமிழீழ காவல்துறை வீதிப்போக்குவரத்து பிரிவினர் விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர். (சோ)

# திருகோணமலையில் மீண்டும் டெங்கு நோய் அபாயம்

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் மீண்டும் டெங்கு காய்ச்சல் பரவ ஆரம்பித்திருப்பதாக மாகாண சுகாதாரத் திணைக்களம் அறிவித்திருக்கின்றது.

திருகோணமலை நகரத்தின் புறநகர்ப் பகுதியான திருக் கடலூரைச் சேர்ந்த பதினொரு வயதுச் சிறுமி பெப்ரவரி 4ஆம் திகதி டெங்கு காய்ச்சல் காரணமாக உயிரிழந்தார் என்று பிராந்தியத் தொற்று நோய்த் தடுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் து.தவக்கொடிராசா தெரிவித்தார். திருகோணமலை நகரிலும் சுற்றுப் புறங்களிலும் டெங்கு நோய் பரவும் அபாயம் மீண்டும் ஏற்பட்டிருப்பதை அடுத்து திருமலை மாவட்ட டெங்கு கட்டுப்பாட்டுக் குழுவின் அவசரக் கூட்டம் ஒன்று கடந்த திங்கட்கிழமை பிற்பகல் மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் நடத்தப்படவிருந்தது. உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், வைத்திய அதிகாரிகள் ஆகியோர் இக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர். (25)

# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை சுகாதாரத் தொண்டர்களுக்கு வேதனமில்லை!

## உதவியளித்த தொண்டு நிறுவனங்கள் பாராமுகம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பணிபுரிந்து வரும் சுகாதாரத் தொண்டர்களுக்கான வேதனங்கள் பல மாதகாலமாக வழங்கப்படாமையின் காரணமாக மேற்படித்தொண்டர்கள் பலத்த அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மேற்படி வைத்தியசாலையில் கடந்த பல வருடகாலமாக கியூடெக், நோயாளர் நலன்புரிநிலையம் ஆகியவற்றின் உதவியுடன் 20 சுகாதாரத் தொண்டர்கள் பணி புரிந்து வருகின்றனர்.

இவர்களுக்கான கொடுப்பனவுகளை அந்தந்த நிறுவனங்கள் மாதா மாதம் வழங்கி வந்தன. ஆனால், தற்போது அவை வழங்கப்படாதுள்ளன. அதாவது கியூடெக் நிறுவனத்தினால் நியமிக்கப்பெற்ற சுகாதாரத் தொண்டர்களுக்கு கடந்த இரண்டு மாதகாலத்திற்கு மேலாகவும் நோயாளர் நலன்புரி சங்கத்தினால் நியமிக்கப்பெற்ற சுகாதாரத் தொண்டர்களுக்கு கடந்த ஆறு மாத காலத்திற்கு மேலாகவும் வேதனங்கள வழங்கப்படாதுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

ஒரு குறிப்பிட்ட சிறிய தொகைப்பணத்தினைப் பெற்றுக் கொண்டு சேவை புரிந்து வரும் சுகாதாரத் தொண்டர்களுக்கு பல மாதங்களாக அந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படாதுள்ளமையானது, அவர்களைப் பாரிய மனத் தாக்கத்திற்கு உள்ளாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சோ)


# மீள்குடியேற்ற நிவாரணம் கோரி இராமநாதபுரம் மக்கள் மறியல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட அரச செயலகம் முன்பாக நேற்று முன்தினமும் இராமநாதபுரத்தைச் சேர்ந்த மக்கள் தங்களுக்கு மீள்குடியேற்ற நிவாரணம் மற்றும் வரட்சி நிவாரணங்களை வழங்கக் கோரி இரண்டாவது நாளாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இராமநாதபுரம் மாதர் சங்கத் தலைவி தங்கேஸ்வரி தலைமையில் நடைபெற்ற மேற்படி மறியல் போராட்டத்தில் இராமநாதபுரம், வட்டக்கச்சி, சிவிச்சென்ரர், மாவடி அம்மன் கிராமத்தைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

நேற்று முன்தினம் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெற்ற மேற்படி மறியல் போராட்டத்தினை தொடர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் கிளி.அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்கள் கிராம மக்களின் கோரிக்கைகள் குறித்து விளக்கங்களை தெரிவித்ததுடன். இராணுவத்தினர் நிலை கொண்டிருந்த பகுதியினை விட்டு வெளியேறி மீண்டும் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு மட்டுமே 25,000 ரூபா மீளக்குடியமர்வுக் கொடுப்பனவுகளை உலக வங்கி நிதி மூலம் வழங்கப் பெற்றுள்ளதெனவும் தெரிவித்ததுடன் இதன் காரணமாக மீளக் குடியமர்வுப் பணம் அப்பகுதிக்கு வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதெனவும், இருப்பினும் அரசினால் மேலும் முன்னெடுக்கப்படும் மாற்றுத் திட்டங்களில் அப்பகுதிக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள எப்படுமெனவும் தெரிவித்தார். மற்றும் வரட்சி நிவாரண வேலை திட்டத்திற்கென ஒரு மாதத்திற்கான உலர் உணவு விநியோகத்திற்குப் பதிலாக அரை மாதத்திற்கு மட்டுமே உலர் உணவுகள் வந்து சேர்ந்ததாகவும் அவற்றினைப் பகிர்ந்தளிக்கும் வண்ணம் தன்னால் பணிப்புரை வழங்கப்பெற்றதெனவும், இது விடயத்தில் வரட்சிப்பணிகளை மேற்கொண்டவர்களுக்கு உலர் உணவு கிடைக்க வழி செய்வதாகவும் தெரிவித்தார் அதனைத் தொடர்ந்து மேற்படி மக்கள் அரச செயலகத்தை விட்டு வெளியேறிச் சென்றனர். (சோ)



# திருமலையில் 10வயதுச் சிறுவனை காணவில்லை எனத் தந்தை முறைப்பாடு

(திருகோணமலை)

திருகோணமலை, பாளையூற்றுப்பகுதியில் வசிக்கும் ஜே.என்.ஜோன்சன் தனது பத்து வயது மூத்தமகன் யோசுவாசென்ஜோன் சனவரி 29 ஆம் திகதி பிற்பகல் 2 மணியிலிருந்து காணாமற்போய் விட்டதாக திருகோணமலைப் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார். தனது மகன் கடந்த இரண்டரை ஆண்டுகாலமாக சம்மாந்துறை சொறிக்கல் முனையில் தனது தந்தையார் ஏ.யோசப்புடன் வசித்து வந்தார் என்றும் சனவரி 29ஆம் திகதி பகல் 1மணியளவில் தனது மனைவியுடன் மகன் சொறிக்கல் முனையிலிருந்து திருமலை வந்தார் என்றும் ஜே.என்.ஜோன்சன் தனது பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். அன்றைய தினம் பிற்பகல் 2 மணியிலிருந்து காணாமற்போன மகன் மூன்றரை அடி உயரம், பொதுநிறம், வட்ட முகம், தலைமுடி கட்டையாக வெட்டியிருந்தார் என்றும் தந்தை முறைப்பாட்டில் தெரிவித்திருக்கின்றார். கடைசியாக அவன் கடும் நீலநிற யம்பர் காற்சட்டை, அரைக்கை கறுப்பு வெள்ளை கோடுபோட்ட ரீ ஷேர்ட் அணிந்திருந்ததாக முறைப்பாட் டில் தந்தை கூறியுள்ளார். சிறுவனைக்கண்டவர்கள் திருமலை பொலி ஸிற்கோ அல்லது 026-2221215 தொலைபேசி மூலம் அறிவிக்கும் படி தந்தை கேட்டுள்ளார். (25)

# சுனாமியால் பாதிப்புற்ற மாணவருக்கு உதவ

# தமிழ் மாணவர் ஒன்றியம் நிதிதிரட்டல்

## ஆதரவு நல்க பொதுமக்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

**சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவும் வகையில் தமிழ் மாணவர் ஒன்றியம் பொது மக்களிடம் நிதி திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இதற்கான உதவிகளை வழங்க முன்வருமாறு மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.**

சுனாமி ஆழிப்பேரனர்த்தங்களால் கல்வி உடமைகளை இழந்து ஏதிலிகளாக இருக்கும் மாணவர்களின். கல்வி நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக நிதி சேகரிப்பு நடவடிக்கைகளை தமிழ் மாணவர் ஒன்றியத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

பாடசாலை மாணவர்களிடமிருந்தும், பொது மக்கள் மற்றும் வர்த்தகர்களிடமிருந்தும் நிதி சேகரிக்கும் நடவடிக்கைகளில் தமிழ் மாணவர் ஒன்றியம் ஈடுபட்டு வருகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் நிதியிலிருந்து பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கல்வி மேம்பாட்டிற்கான பொருள் மற்றும் நிதி உதவிகள் வழங்கப்படவுள்ளன. (33)

# சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்கள்

# தொழிலுக்குச் செல்ல படையினர் கெடுபிடி!

(பருத்தித்துறை)

வடமராட்சியில் மீனவர்களது விபரங்கள் ஆவணங்களை சிறிலங்கா இராணுவத்தினர் இழந்துவிட்டதினால் வடமராட்சி வடக்கு மீனவர்கள் கடற்றொழில் செய்வதில் நீண்ட தாமதம் ஏற்பட்டுள்ளது.

இப்பகுதி மீனவர்கள் கடற்றொழில் செய்வதற்கு இராணுவத்தினரின் பாஸ் நடைமுறை முன்னர் இருந்து வந்தது. அந்த பாஸ் நடைமுறைக்கு ஒவ்வொரு மீனவர்களது ஆவணங்கள், புகைப்படங்கள் என்பன உள்ளடக்கப்பட்டிருந்தது.

தற்போதைய சுனாமி கடல் கோளினால் இராணுவத்தினர் சகல மீனவர்களது ஆவணங்களையும் இழந்து விட்டதனால் மீனவர்களைப் படையினர் கடலுக்குச் செல்ல அனுமதி மறுத்து வருகின்றனர்.

மீண்டும் மீனவர்கள் பற்றிய சகல ஆவணங்களையும் படையினர் பெற்றுக் கொண்டதன் பின்னரே மீனவர்கள் கடற்றொழில் செய்ய அனுமதிக்கப்படுவரென தெரிய வருகிறது. அதுவரை மீனவர்களது ஜீவனோபாயம் பெரியளவில் பாதிக்கப்படுமென அஞ்சப்படுகிறது. (45)

# யாழ்–தீவக பிரதான வீதியை புனரமைக்க வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து தீவகத்திற்குச் செல்லும் பண்ணைப் பாலத்தினூடாக பிரதான வீதியினை புனரமைப்புச் செய்வதில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் உரிய கவனம் செலுத்துவதில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

மேற்படி வீதி நீண்டகாலமாக சீரான முறையில் புனரமைக்கப் படாததினால் அவ்வீதி கடல் நீரினுள் மூழ்கி விடக்கூடிய அபாயம் காணப்படுகிறது.

எனவே இவ்வீதியை கற்கள் இட்டு உயர்த்துவதன் மூலம் வீதி கடலினுள் மூழ்கி விடக்கூடிய அபாயத்திலிருந்து பாதுகாக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (33)

# வைத்தியசாலையைப் புனரமைத்தும் சேவைகள் சீராக நடைபெறவில்லை!

(பருத்தித்துறை)

ஒன்றேகால் கோடி ரூபா செலவில் மீள் புனரமைப்புச் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்ட மருதங்கேணி அரசினர் வைத்தியசாலை நோயாளர்களின் அவசர தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாத நிலையில் இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

2000ஆம் ஆண்டு நடந்த போரினால் அழிந்த இந்த வைத்தியசாலை ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்ட நிதியிலிருந்து புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. எனினும் அப்பகுதி மக்களின் அவசர தேவைகளான பிரசவ விடுதி, நோயாளர்களுக்கான விடுதி என்பன இன்னமும் செயற்பட ஆரம்பிக்காததினால் பெரும் வேதனைகளை அனுபவித்து வரு வதாக தெரிவிக்கப்படுகின்றது. இதற்கு ஆளணிப் பற்றாக்குறையும் ஒரு காரணமென மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (45)

# இன வன்முறைகளால் பாதிப்புற்ற குடாநாட்டு மீனவருக்கு இழப்பீடு

(யாழ்ப்பாணம்)

இன வன்முறைகளால் பாதிக்கப்பட்ட யாழ்.குடாநாட்டு மீனவர்களுக்கு நஷ்டஈடுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில் 1983 தொடக்கம் 2001ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் இடம்பெற்ற இன வன்செயல்களால் பாதிக்கப்பட்ட யாழ்.குடாநாட்டு மீனவர்களுக்கே இவ்வாறான நஷ்ட ஈடுகள் வழங்கப்படவுள்ளது.

இதற்காக 3000 மில்லியன் ரூபா நிதியைச் திறைசேரி ஒதுக்கியுள்ளதாக கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம் தகவல் தெரிவித்துள்ளது. (33)

## - கந்தர்மடம் அம்மன் வீதியில் -

# தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு ஓடிய இருவர் வகையாக மாட்டினர்!

(நல்லூர்)

உந்துருளியில் வந்து தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு ஓட முற்பட்ட இளைஞர்கள் இருவர் கலாச்சாரத்தைப்பேணும் குழுவிடம் வகையாக மாட்டிக்கொண்டனர். நேற்று முன்தினம் மாலை கந்தர்மடம் அம்மன் வீதியில் தனியாக வந்த பெண்ணின் கழுத்தில் இருந்து சுமார் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதி உடைய தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு ஓடியபோதே இவ் இளைஞர்களை கலாச்சாரத்தைப் பேணும் குழுவினர் கலைத்துப் பிடித்துள்ளார்கள்.

ரி.வி.எஸ். இன உந்துருளி இலக்கம் எச்.வி.9292இல். வந்தவர்களில் ஒருவர் ஆனைக்கோட்டை சிப்பித்தலைப் பகுதியைச் சேர்ந்தவர் மற்றவர் தப்பிஓடியுள்ளார்.இவரைத்தேடும் நடவடிக்கையில் கலாச்சாரத்தைப் பேணும் குழுவினர் ஈடுபட்டுள்ளனர். அறுக்கப்பட்ட தாலிக்கொடி உடனடியாக உரிய பெண்மணியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (41)

# காணாமல் போன உந்துருளி அரசியல் துறையினரால் மீட்பு

(அலுவலக செய்தியாளர்)

காணாமல் போன உந்துருளி யாழ்.கோட்ட அரசியல் துறையினரால் மீட்கப்பட்டு உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை இரவு 9.00 மணியளவில் நல்லூர் முடமாவடிச் சந்தியில் உரிமையாளர் குறித்த உந்துருளியை நிறுத்தி விட்டு கடைக்குச் சென்றபோது திருடப்பட்ட உந்துருளி இரவு10-30 மணி அளவில் முத்திரைச்சந்தி யமுனா வீதியில் வைத்து மீட்கப்பட்டது. அரசியல் துறையினர் துரத்திச் சென்றபோது திருடர்கள் உந்துருளியை விட்டுத்தப்பிச் சென்றுள்ளனர். மீட்கப்பட்ட உந்துருளி உரிமையாளரான பிள்ளைநாயகம்- றமேஸ் என்பவரிடம் நேற்றுமுன்தினம் முற்பகல் 11.30 மணி அளவில் ஒப்படைக்கப்பட்டது. (சு)

# வடமராட்சி கரையோர அணையை புனரமைக்க ரூ.60 லட்சம் நிதி தேவை

*–மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாச சம்மேளனம் தகவல்*

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சியின் கடற் கரையோர அணையைப் புனரமைப்பதற்கு உடனடியாக 60 இலட்சம் ரூபா நிதி தேவைப்படுவதாக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாச சம்மேளனத்தினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களைத் தாக்கிய சுனாமி ஆழிப்பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு சேதமடைந்த யாழ்.வடமராட்சியின் கடலோர அணையின் பகுதிகளைப் புனரமைக்கவே இந்நிதி தேவைப்படுவதாகச் சுட்டிக் காட்டியிருக்கும் கடற்றொழிலாளர் சம்மேளனம் உடனடியாகவே கடலணையைச் சீர்செய்யாவிட்டால் கடலரிப்புக்களால் நிலப்பரப்பு உள்வாங்கப்படும் அபாயம் உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

எனவே இதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கசமாச சம்மேளனம் யாழ் அரசாங்க அதிபர் கே.கணேஷிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (33)



வட்டக்கச்சி மாயவனூர் வித்தியாலய தரம் ஒன்று மாணவர்களின் புகுமுக விழா கடந்த 27 ஆம் திகதி காலை 930 மணிக்கு ஆரம்பமாகியது. தேசியக்கொடியினை கணிதபாட உதவிக்கல்விப் பணிப்பாளர் முருகவேலும் பாடசாலைக்கொடியினை வித்தியாலய முதல்வர் திருமதி கோபாலராசாவும், மங்கல விளக்கினை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பொ.இராசுவும் வித்தியாலய உதவி அதிபர் திருமதி. ப.சத்தியநாதனும் ஏற்றிவைத்தனர். புகுமுக மாணவர்களுக்கு பாராட்டினையும் வாழ்த்துக்களையும் அரசியல்துறைப் பொறுப்பாளா, சோழ நிலவன் , மாயவனூர் கிராம சேவகர் ஜோண்ஜெகநாதன், இகஜேந்திரன் கணிதபாட உதவிக் கல்விப்பணிப்பாளர் முருகவேல் ஆகியோர் வழங்கினார்கள். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் புகுமுக மாணவர்களின கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன. (படம் ரூபன்)

# படையினரால் கைதாகி காணாமல் போன ஐவரின் வழக்கு விசாரணை நடைபெற ஏற்பாடு

(வடமராட்சி)

1996/97 ஆம் ஆண்டு காலப் பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன தமிழ் இளைஞர், யுவதிகள் ஐவர் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்கள் மீதான வழக்குகளின் விசாரணைகள் எதிர்வரும் மார்ச் 28ஆம் திகதி முதல் ஏப்ரல் 1ஆம் திகதி வரையான 5 நாட்கள் இடம் பெறவுள்ளது. இவ் ஐந்து ஆட்கொணர்வு மனுக்கள் தொடர்பான விசாரணைகளினை முடிவுறுத்திய பின்னரே எஞ்சிய வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் அரியாலை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இடம்பெற்ற காணாமல் போதல் சம்பவங்கள் ஐந்து தொடர்பில் உறவினர்களால், ஆட்கொணர்வு மனுக்கள் யாழ். மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இவ் ஆட்கொணர்வு மனுக்களில் முதலாம் எதிரியாக கிருஷாந்தி குமாரசாமி கொலை வழக்கின் மரண தண்டனைக் கைதியாக உள்ள கோப்ரல் ராஜபக்ஷ குறிப்பிடப்பட்டிருந்தார்.

இவ் ஆட்கொணர்வு மனுக்களை விசாரணைக்கு எடுத்திருந்த மேல்நீதிமன்ற நீதவான் கே.பி.எஸ் வரதராசா, ஆரம்ப கட்ட விசாரணைக்களுக்காக அவற்றினை யாழ். நீதவான் நீதிமன்றிற்கு மாற்றியிருந்தார்.

இந் நிலையில் நேற்று முன்தினம் இவ் வழக்குகள் யாழ். நீதிமன்றில் மேலதிக நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் எடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை எதிரியாக குறிப்பிடப்பட்டுள்ள கோப்ரல் ராஜபக்ஷ சார்பில் சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகாத நிலையில் அவரே தன் சார்பில் வாதாடினார்.

மனுதாரர் சார்பில் மனித உரிமைகளுக்கான சட்டத்தரணி எம் ரெமீடியஸ் ஆஜராகியிருந்தார். (27)

## பாதிப்புற்றோருக்கு உதவி

(பருத்தித்துறை)


வியாபாரிமூலை நாவலர் சனசமூக நிலையம் சுனாமி ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மக்களுக்கென நிதி வழங்கியுள்ளது. திருநாவலூர் நாவலர் சனசமூக நிலையம் 35000 ரூபாவை உரியவர்களிடம் வழங்கியுள்ளது. (45)

# சந்திரிகாவின் சிறைக்கைதிகளாக ஜே.வி.பி.யினர் மாறி விட்டனர்!

"சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது" என்று நமது பழமொழி ஒன்று


சந்திரிகா

உள்ளது. இன்று ஜே.வி.பியினருக்கு அதே கதிதான் ஏற்பட்டுள்ளது. பண்டார நாயக்கர்களுடன் கூட்டு ஒப்பந்தங்கள் செய்து கொண்டு பின் அவர்களுக்கு பாடம் கற்பிக்கச் சென்ற பழைய இடதுசாரிகளுக்கு என்ன நடந்தது என்பதை சரித்திரங்கள் கூறும். 1970 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட


பண்டார நாயக்க

பொதுஜன ஐக்கிய முன்னணி, பின் 1977ஆம் ஆண்டு பிரிந்து சென்ற இடதுசாரிகளுக்கு நடந்த அதே கதிதான் 2004ஆம் ஆண்டு சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கூட்டு ஒப்பந்தம் செய்துள்ள ஜே.வி.பியினருக்கு நடக்கப் போகின்றது.

இன்று ஜே.வி.பி சுதந்திரக் கட்சியினரின் சிறைக் கைதியாக்கப்பட்டுள்ளது. இதற்கு முழுப் பொறுப்பையும் களுத்துறையைச் சேர்ந்த ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க அதன் செயலாளர் டில்வின்சில்வா, பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச, நந்தன குணதிலக்க ஆகியோர் ஏற்றுக் கொள்ள வேண்டும். இவர்கள் இக் கூட்டை அமைத்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரை தமது கட்சியின் சிறைக் கைதிகளாக வைத்திருப்பதாகவே இவர்களின் கணிப்பீடு. ஆனால் அது தோல்வி கண்டு தற்பொழுது ஜே.வி.பியினர் எல்லோரையும் சந்திரிகா சிறைக் கைதியாக்கி திறப்பை தம் வசம் வைத்துக் கொண்டுள்ளார்.

இந்த ஜே.வி.பியினருக்கு களுத்துறை ஒப்பந்தக்காரர்கள் என்ற பெயரும் உண்டு. இது நாட்டில் உள்ள அநேகருக்குத் தெரியாது. சோமவன்ச அமரசிங்க என்பவர் ஜே.வி.பியில் மூன்றாவதாக அரசியல் தலைமைப்பீடத்தை ஏற்றுக் கொண்டவர். இவர் களுத்துறையில் பிறந்தவர். இவர் இலங்கையில் இருந்து தலைமறைவாகி லண்டனில் வசித்து வந்தவர். டில்வின் சில்வா, விமல்வீரவன்ச, நந்தன குணதிலக்க இவர்களும் களுத்துறையில் பிறந்தவர்கள் என்றபடியால் சோமவன்ச அமரசிங்கவை மூன்றாவது தலைவராக ஏற்றுக் கொண்டனர்.

இன்று டில்வின் சில்வாவும், விமல் வீர வன்சவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் மிக நெருக்கமாகச் செயற்படுகின்றவர்கள். அதே நேரத்தில் நந்தன குணதிலக்கவும், ஏனைய ஜே.வி.பி உறுப்பினர்களும் மிக நெருக்கமாக பழகாதவர்களாகவே தற்பொழுது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிறைக் கைதிகளாக விமல் வீரவன்ச, டில்வின் சில்வா, சோமவன்ச அமரசிங்க ஆகியோரை அடைத்து வைத்து திறப்பை சந்திரிகா தமது கையில் வைத்துக் கொண்டுள்ளார்.

ஜே.வி.பி அரசியல் பீடம் கடந்த வாரம் ஒன்று கூடி சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து விலகுவதற்கு நாள் முழுவதும் எடுத்த தீர்மானங்களைப் பற்றி பத்திரிகைகளில் வெளி வந்த செய்திகள் இவர்களின் கோமாளி அரசியல் குறளி வித்தையைக் காட்டியுள்ளது.

இதில் என்ன புதுமை என்றால் நாள் முழுவதும் பேச்சுவார்த்தைகள் நடத்தி அரசாங்கத்தில் இருந்து விலகுவதற்கு எடுத்த தீர்மானத்தை கடைசி நேரத்தில் விமல்வீரவன்ச நிராகரித்தார். சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பியினருக்கும் திரைமறைவிலிருந்து கொண்டு தரகர் வேலை செய்த லக்ஸ்மன் கதிர்காமரை ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணியின் பிரதமராக்குவதற்கு ஜே.வி.பி எடுத்த முயற்சிகள் தோல்வியைத் தழுவிக் கொண்டது. இவ்வாறு ஜே.வி.பிக்கு நெருக்கமான கதிர்காமருக்கு பேச்சு வார்த்தைகளின் விபரங்களை ஜே.வி.பியினர் அறிவித்திருக்கின்றனர். இது தொடர்பாக சண்டே ரைம்ஸ் அரசியல் கட்டுரையாளர் வேறு விதமாகத் தெரிவித்துள்ளார். அதாவது அரசாங்கத்தில் இருந்து ஜே.வி.பி விலகப் போவதாக பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது சோமவன்ச அமரசிங்க கதிர்காமருடன் கலந்துரையாடுவதற்கு நேரம் ஒன்றை ஒதுக்கித் தருமாறு தொலைபேசி மூலமாகக் கேட்டுள்ளார். கதிர்காமர் நேரம் ஒதுக்கித் தந்து அவரைச் சந்தித்த பொழுது ஜே.வி.பி அரசியல் பீடம் எடுத்த தீர்மானங்கள் சம்பந்தமாக சோமவன்ச அமரசிங்கவோ டில்வின் சில்வாவோ ஒரு வார்த்தையாவது இதைப் பற்றிக் கதிர்காமரிடம் கூறவில்லை. ஆனால் கடைசியில் கதிர்காமரிடம் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டணியில் இருந்து விலகும் தீர்மானத்தை வாபஸ் பெற்றுக் கொண்டுள்ளோம் என்பதை இவர்கள் கூறினார்கள்.

இதில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் வெளிநாட்டு நிவாரணங்களைப் பங்கிட்டுக் கொள்வதற்கு உடன்பட்டதை முக்கிய பிரச்சினையாக கதிர்காமருக்கு எடுத்துக் கூறினார்கள். ஆனால் இப் பிரச்சினைக்குச் சாதகமான பதில் அவரிடமிருந்து ஜே.வி.பியினருக்குக் கிடைக்கவில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து விலகுவதற்கு ஜே.வி.பி அரசியல் பீடத்திலிருந்து பெரும் அழுத்தம் ஏற்படுத்தப்பட்டது. அதில் நந்தன குணதிலக்கவும் இருந்திருப்பார். ஆனால் கதிர்காமருடன் கலந்தாலோசிப்பது என்ற போர்வையில் சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் இருந்து விலகும் எண்ணத்தைக் கைவிட்டு விட்டோம். என்று கூறி தாங்கள் நல்ல பிள்ளைகள் என கதிர்காமரின் வாயால் கூறும் அளவிற்கு அவரை அரசியல் முட்டாளாக்கி விட்டார்கள். ஜே.வி.பியில் இரு பகுதியினர் இருக்கின்றனர். ஒரு பகுதி சோமவன்ச அமரசிங்க, டில்வின் சில்வா, விமல்வீரவன்ச மற்றப் பகுதி நந்தன குணதிலக்க, லால்காந்தவும் ஏனைய அங்கத்தவர்களும் செயற்படுகின்றனர். சோமவன்ச இப்பொழுது ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வருவதை விரும்பமாட்டார். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் சோமவன்ச இந்த நாட்டில் இருக்க முடியாது. விமல் வீரவன்ச ஐக்கிய தேசியக் கட்சியின் பரம எதிரியாவார். இவர்களுடன் தான் டில்வின் சில்வாவும் இருக்கின்றார். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி ஏறுவதை எப்படியாவது தடுப்பதற்கு முயற்சி எடுப்பார்கள் காரணம் சந்திரிகாவின் அரசியல் காய் நகர்த்தல் வேறு விதமாகத் திரும்பியுள்ளது.

ஜே.வி.பினயிரைப் பயன்படுத்தி தமது இராஜதந்திரம் மூலம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கைதிகளாக்கியுள்ளார் என்பதை தற்பொழுது ஜே.வி.பியினர் புரிந்து கொண்டுள்ளனர். இரண்டு கிளர்ச்சிகளுக்குப் பின்னர் தற்பொழுது ஜே.வி.பி தனது கட்சிக்குள் இருந்து அரசியல் செல்வாக்குடன் வளர்வதை அவர் விருப்பவில்லை.

ஜே.வி.பியினரைப் பயன்படுத்தி ஜே.வி.பியை அழிப்பதே அவரின் திட்டமாகும். பலமுறை ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கிக் கொடுத்ததுடன் ஜே.வி.யினர் பலமுறை சந்திப்பதற்கு


சிறிமாவோ

நேரம் ஒதுக்கி தருமாறு கேட்டும் அவர் நேரம் ஒதுக்கிக் கொடுக்கவில்லை. சுதந்திரக் கட்சியின் செயற் குழுக் கூட்டத்திலும், இது சம்பந்த மாக ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவிடம் கேட்டும் அவர் அவர்களுக்குத் தகுந்த பதில் கொடுக்கவில்லை.

அதைவிட இப்பொழுது சந்திரிகா அம்மையார் சுனாமி நிவாரணப் பணிகளை வடக்குக் கிழக்கில் விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்படப் போவதாகக் கூறியுள்ளார். ஆனால் ஜே.வி.பி.யியின் கோட்டையான காலியில் இவர்களை நிவாரணப் பணியில் ஈடுபடுவதை முற்றாகத் தடை செய்து கொண்டு சகல நிவாரணப் பணிகளையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மேற்கொண்டுள்ளது. மேலும் ஜே.வி.பி.யினரின் நிவாரணப் பணிகளை தொலைக் காட்சியில் வெளி யிடுவதையும் முற்றாகத் தடை செய்துள்ளார். இவைகளையெல்லாம் பார்த்துக் கொண்டு வெட்கம் இல்லாமல் அரசுடன் ஒட்டிக் கொண்டு இருக்கின்றது ஜே.வி.பி.

1970ஆம் ஆண்டு தொடக்கம் 1977ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்போதைய இடதுசாரிகள் வலதுசாரிகளுக்கு எதிராகவே



விமல் வீரவன்சா

செயற்பட்டனர். அதாவது பணக்காரரின் சொத்துக்களை தேசிய மயமாக்கினார்கள். காணி உச்ச வரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்து வெற்றி பெற்றார்கள்.

அவர்கள் அரசியல் யாப்பைத் திருத்திப் பிரித்தானிய ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டார்கள். அமெரிக்காவையும் மேற்கத்திய நாடுகளையும் இலங்கையில் இருந்து வெளியேற்றினார்கள்.

இப்பொழுது சிறிலங்கா சுதந்திரக் கட்சியும். ஜே.வி.பியும் கூட்டு ஒப்பந்தம் செய்து ஒரு வருடம் பூர்த்தியாகி விட்டது. "வெளிநாட்டு ஆதிக்கத்தில் இருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கே நாங்கள் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளோம்." என ஜே.வி.பியினர் மக்களுக்கு மேடைகளில் கூறி பதவிக்கு வந்தார்கள். அந்த ஜே.வி.பி.யின் கோட்டையான காலியில் தற்பொழுது அமெரிக்கப் படைகள் முகாம் அமைத்து இருக்கின்றனர்.

இலங்கைச் சரித்திரத்தில் முதற் தடவையாக அமெரிக்கப் படை இங்கு வந்துள்ளது. வந்ததும் காலியில் முகாம்களை அமைத்துள்ளது .ஏன் இவைகளை தட்டிக் கேட்க முடியாமல் ஜே.வி.பி இருக்கின்றது? இவர்களின் வாய் வீச்சுக்கு என்ன நடந்தது? விடுதலைப்புலிகள் நாட்டைப் பிரிக்க போகிறார்கள். அதற்கு நாங்கள் இடம் கொடுக்க மாட்டோமெனக் கூச்சலிட்டார்கள். இப்பொழுது சந்திரிகா அம்மையார் வடக்கு

லங்காதிப சிங்கள நாளிதழ்
உப்புல் ஜோசப் பர்னாந்து
மொழியாக்கம். அ.சக்திவேல்

கிழக்கில் நிவாரணப் பணிகளில் விடுதலைப்புலிகளை இணைத்துக் கொண்டு வடக்குக் கிழக்கை மீண்டும் கட்டியெழுப்புவோம் என்று கூறியுள்ளார். ஏன் இப்பொழுது ஜே.வி.பியினர் மௌனம் சாதிக்கின்றனர். 39 ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லாவிட்டால் அரசாங்கம் ஆட்சி செய்ய முடியாது. சந்திரிகா செய்வதெல்லாம் பிழை, இவைகளை எங்களால் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. இப்படிக் கூறிக் கொண்டு ஏன் சேலைத் தலைப்பில் தொங்கிக் கொண்டு இருக்கின்றார்கள். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து இவர்கள் வில்க மாட்டார்கள். அடித்துத் துரத்தினாலும் போக மாட்டார்கள். இப்பொழுது இவர்கள் செல்லாக் காசாகியுள்ளார்கள். இப்பொழுது ஜே.வி.பியினர்கள் பண்டாரநாயக்கர்களின் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். எஸ்.பி திஸாநாயக்கா வெலிக்கடைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளார். இரண்டு சிறைச் சாலைத் திறப்புகளும் சந்திரிகாவின் பையில் உள்ளன.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

**முல்லைத்தீவு** வண்ணாங்குளத்தில் உள்ள எங்கள் வீட்டில் இருந்து சம்பவதினம் காலை 7.30 மணிக்கு எனது மூத்தமகளைக் கூட்டிக்கொண்டு புதுக்குடியிருப்புக்குப்போயிருந்தேன். நாங்கள் வீட் டில் இருந்து புறப்படும்போது வழமை யான பொழுது போலத்தான் காலநிலை இருந்தது. முதல் நாள் தான் யாழ்ப்பாணத் திலிருந்து வந் திருந்ததால் எனக்கு அலுப்பாக இருந்தது. என்றாலும் மகளுக்கு புதுக்குடியிருப்பில் 8.30 மணிக்கு வகுப்பு இருந்தது. அதனால் அவரை ஏத்திக் கொண்டு போவதற்குத்தயாரா கிக் கொண்டிருக்க எனது கடைசி மகன் தானும் எங் களுடன் வரப்போவதாக அடம்பிடித்து அழுதுகொண்டிருந்தான்.



அவனைக் கூட்டிக்கொண்டு போவ வெளிக்கிட எங்கட சொந்தக்காரப் பெடியளும் என்னோட வந்தார்கள். எனக்கு றோட்டால வரவர என்ர வீட்டுக்காரற்ற நினைவுகள் தான் ஓடிக்கொண்டிருந்தது. அதுவும் என்ர சின்னவன் நான் வெளிக் கிடேக்கையும் தானும் வரப்போறன் எண்டு அழுதவன் இப்படியே ஒவ்வொருவராக நினைச்சுநினைச்சு கலங்கிக கொண்டு வர சனங்கள் உடுத்த உடுப்போட றோட்டால ஓடியும் நடந்தும் வாகனங்களிளையும் கதறி அழுதுகொண்டு புதுக்குடியிருப்புப் பக்கமாக போய்க்கொண்டிருந்தார்கள்.

எனக்கு மனம் கேக்கேல்ல அவயளைக் கேட்டன் உங்கால என்னமாதிரி நிலைமை இருக்கு சனங்களுக்கு ஏதும் ஆகியிருக்கோ என்று ஓடிக்கொண்டிருந்த சனத்தைக் கேட்டேன். அவர்கள் சொன்னார்கள் "ஐயோ கடல் இப்பிடி வரும் எண்டு ஒருத்தருக்கும் தெரியாது. அங்க ஊர் எல்லாம் கட்டடங்கள், மரங்கள் ஒண்டும் தெரியாமல் கடல் நிக்குது. கனசனம் செத்துப்போச்சு. நாங்கள் தப்பிட்டம் அதால ஓடுறம் நீங்களும் அங்கால போமாட்டீங்கள் போய்ப் பாருங்கோ" என்று சொல்லியபடி அவர்கள் போய்க்கொண்டிருந்தார்கள்.

இருந்திச்சு. அதுகளுக்குள்ளால ஒருமாதிரி கஷ்ரப்பட்டு ஏறி விழுந்து கச்சேரி அடிக்கு வந்திட்டன். அதிலவந்தால் நெஞ்சளவுக்குத் தண்ணி ஓடிக்கொண்டிருந்தது. அதுக்குள்ளாலையும் இறங்கி மெல்லமெல்லமா நடந்து போனேன்.


அதுக்குள்ளால நடந்துபோக தண் ணிக்கு மேலால சனத்தின்ர பொடியள் மிதந்து வந்துகொண்டிருந்தது. அதில சின் னாக் களின்ர பெரியாக்களின்ர எல்லாற்ற பொடியுமே மிதந்து வந்து கொண்டிருந்தது. அதுகளைப்பார்க்க எனக்கு வீட்டுக்காரற்ற ஞாபகம் தான் வந்தது. மிதந்துவாற ஒவ்வொரு பொடியையும் பார்த்துப்பார்த்து கச்சேரியடித் தண்ணியையும் கடந்து வீட்டுக்குப்போனேன்.

வீட்டுக்குப் போறபாதையே தெரி யேல்ல எல்லாம் தண்ணியால மூடு பட்டுக்கிடந்தது. கட்டடங்கள் ஒண்டும் இருந்த மாதிரி தெரியவேயில்லை. எங்க காலை வைச்சாலும் உடைஞ்ச கல்லுகளும் மரந்தடியளும் தான் மிதிபட்டுச்சுது.

நான் எங்கட வீட்டு ஒழுங்கைக்குள்ளால போய் வீட்டைத்தேடினன் வீடு இருந்த மாதிரியான தோற்றமே இல்லை. எங்கட மாமரம் இருந்தது. இதுதான் என்ரவீடு எண்டுறத உறுதிப்படுத்திப்போட்டு அந்த கல்லுகள் குப்பைகள் எல்லாத்துக்குள்ளாலையும்

கூடவந்த சொந்தக்காரப் பெடி யள் என்னைப்பிடிச்சு சந்திக்குக் கொண்டு வந்திட்டாங்கள். அதில நிண்டு அழுது கொண்டிருக்க மயில்புடவைக்கடை முதலாளி என்னட்ட வந்து "உங்கட அவாவையும் மற்ற இரண்டு பிள்ளையை யும் கண்டனாங்கள்" என்று சொன்னார். கொஞ்சம் ஆறுதலாய் இருந்தது.

பிறகுதான் யோசிச்சன் அவர் சொன்ன குறிப்புக்கு என்ர சின்னவனும் மாமியும் இல்லை. எனக்கு இப்ப என்னும் தலைச் சுத்துக் கூடிவிட்டது. நான் புதுக்குடி யிருப்புக்குப் போகேக்க "அப்பா நானும் வாறன் என்னையும் கூட்டிக்கொண்டு போங்கோ" என்று அடம் பிடித்து அழுது கொண்டிருந்த சின்னவன் தான் தவறி விட்டான். நான் அவனைக் கூட்டிக்கொண்டு போயிருந்தால் தப்பியிருப்பான் என்று என்னுள் புலம்பிக்கொண்டிருந்தேன்.



இப்படியே புலம்பி விட்டு இவர்களைத் தேடி முள்ளியவளைக்கு வந்தேன். எங்கள் வீடு

**முல்லைத்தீவை கடல் அலைகள் எழுந்து தாக்கியசமயம் புதுக்குடியிருப்பில் நின்ற செம்மலை பாடசாலை அதிபர் திரு.ராஜகுலசிங்கம் என்பவர் முல்லைக்கடல் ஓரத்தில் இருந்து 200மீற்றர் தூரத்துக்குள்ளாக வண்ணாங்குளத்திலுள்ள தனது வீட்டில் இருந்த குடும்பத்தினரின் நிலை தெரியாது காலை 11.30 மணிக்கு தனது வீட்டுக்குச் சென்று பார்த்தவை என்ன? அவரது மன உணர்வுகள் எப்படி இருந்தது? வீட்டுக்காரர் என்ன ஆனார்கள்? என்பன பற்றி விபரிக்கிறார்.**

# முரட்டு அலையிலிருந்து வீட்டுக்காரர்கள் தப்பியதை நம்ப முடியாமல் இருந்தது

தற்குத்தான் மனம் சொன்னது. ஆனால் நான் போகின்ற வேலைக்கு இவரையும் கூட்டிக் கொண்டு போனால் கஷ்ரமா யிருக்கும் அதனால் அவரை தாயுடனும் மற்ற இரண்டு பிள்ளைகளுடனும், மாமியார் உடனும் வீட்டில் விட்டு நானும் மகளும் புறப்பட்டுவிட்டோம்.

எனது மோட்டார் சைக்கிளில் புதுக்குடியிருப்புக்கு போய்ச்சேர்ந்து விட்டோம். புதுக்குடியிருப்பில் கடும் மழை கொட்ட ஆரம்பித்து விட்டது. அந்த மழைக்குள் இருந்து வெளியால் வெளிக்கிட முடியவில்லை. இப்படியே

**அ.லோகீசன்**

நேரம் 10.45 தாண்டிவிட்டது. மதியச் சாப்பாட்டை முடித்துக் போவோம் என்று நினைத்து புதுக குடியிருப்புச் சந்தைக்கு மீன் வாங்கப் போனோம். அங்கு போனபோது முல்லைத்தீவில் கடல் வந்து தண்ணி ஏறி விட்டதாம். என்ற கதை பரவலாக அடிபட்டுக் கொண்டிருந்தது.



**பகுதி -20**

கிடந்த நிலையைப் பார்த்தபோது இவர்கள் தப்பி இருக்க மாட்டார்கள் என்றுதான் நினைத்தேன். மயில்கடை முதலாளி கூறியதையும் என்னால் நம்பமுடியாமல் இருந்தது. எப்பிடியும் அவர்களை என் கண்ணால் பார்த்தால் தான் எனது மனம் ஆறும் போல் இருந்தது.

முள்ளியவளைக் குத் தேடிவந்தேன். அங்குவர மாமி யைத்தவிர மிச்சம் அனைவரும் இருந்தார்கள். அவர்களைப் பார்த்த பிறகுதான் எனக்கு உயிர் வந்தது. என் மனைவியும், மூன்று பிள்ளைகளும் இருந்தார்கள். பிறகு மாமியைத் தேடிப்போனேன் 300 சடலங்களுக்கு மேல் தேடியும் மாமியைக் காணவே இல்லை. வீட்டுக்காரர் தங்களை அரவிந்தன் தான் காப்பாற்றிக் கொண்டு வந்தது. அவர் இல்லை எண்டால் நாங்கள் தப்பியே இருக்கமாட்டம் என்று சொன்னார்கள்.

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

இந்தக் கதையைக்கேட்டவுடன் நான் பெரிதாக நினைக்கவில்லை. சும்மா ஒரு அலை உள்ளுக்கு வந்து கழுவிக்கொண்டு போயிருக்கும் அத இஞ்ச சனம் பெரிசா கதைக்குதுகள் என்று நினைத்தேன்.

இப்படி இருக்க பிறகு சொன்னார்கள் " கடல் பெரிசா எழும்பி அடிச்சு முல்லைத் தீவு முழுக்கச்சரியாம் ஊருக்குள்ள வந்த கடல் இன்னும் கடலுக்க திரும்பிப்போக வில்லையாம். அவ்வளவு சனத்துக்கும் என்ன நடந் தது. எண்டு கூடத் தெரியாதாம்." என்று சொன்னார்கள். இதைக் கேட்டதும் எனக்கு உயிர் போனமாதிரி இருந்திச்சுது.

நான் உடனடியாக அங்க இருந்து

எனக்கு மயக்கம் வாறது மாதிரி இருந்தது. அது மட்டுமல்லாமல் இப்படி நடந்திருக்குமோ எண்டுறதக்கூட நம்ப ஏலாமலிருந்தது.

ஒருமாதிரி 11.30 மணி இருக்கும் வட்டுவாகல் பாலத்துக்குப் போய்ச்சேந்திட்டம். அங்க பாத்தால் பாலத்தை மேவிக் கடல் ஓடிக்கொண்டிருந்தது. அங்கால போக ஏலாது ஒருத்தரும் போகவேண்டாம் என்று போராளியளும், காவல்துறையும் சேர்ந்து மறித்தார்கள். நான் அவர்களின் தடையையும் மீறி இடுப்பளவு தண்ணிக்குள்ளால இறங்கி பாலத்தின்ர மற்றகரைக்குப் போய்ச்சேந்திட்டன்.

இப்படியே முல்லைத்தீவுக்குப் போக ஏலாது கஞ்சலுகள் நிறைஞ்சு போய்

தவண்டு எழும்பி வளவுக்குள் போனேன். வீடு கிடந்த இடத்தில கப்பல் மாதிரி ஒரு பெரிய தகடு மாமரத்துடன் பொறுத்துக் கொண்டு கிடந்திச்சிது.

சரி வீடு போட்டுது அதுபோகட்டும் இப்ப என்ர மனைவி, பிள்ளையளின்ர நிலை என்ன என்று நினைச்சுக்கொண்டு அங்கால இஞ்சால எல்லாம் சுத்திப் பார்த்தன். முத்தத்தில என்ர வீட்டுக்காரற்ற அழவில பொடியள் உடுப்பில்லாமல் கிடந்தது. அதுகளைப்பார்த்த உடன எனக்கு இரத்தம் உறைந்துபோன மாதிரிக் கிடந்தது. ஒவ்வொரு பொடியாய்ப் பாத்துத் தூக்கிதூக்கி அழுதன் அது ஒன்றும் எங்கட வீட்டுக்காரற்ற இல்லை. அழுதுபோட்டு என்ர வீட்டுக்காரர் ஒருத்தரும் இதுக்க இருந்து தப்பி இருக்க மாட்டினம். நானும் மூத்தவளும் தான் மிச்சம் போல "கிடக்குது. என்று நினைத்துக்கொண்டு அந்த தேசம் எல்லாம் அலைஞ்சு தேடிப்பார்த்தன்.

இப்படி இருக்க எனக்கு தலைசுற்றி யது. மயக்கம் வாறதுமாதிரி இருந்தது. என்னுடன்

எனக்குக் கடவுள் நம்பிக்கை அதிகம் அரவிந்தனை கடவுள் தான் அந்த இடத்துக்கு அனுப்பியிருந்திருக்கிறார் என்று தனது வேதனையான அனுபவத் தைக் கூறி முடித்தார் அந்தக் குடும்பஸ்தர்.

சம்பவம் நடைபெற்ற தினம் அதிகாலை தொழிலுக்காகச் சென்றவர்கள் கடலில் இருந்து கரையை நோக்கி வந்தபோது அவர்கள் கண்ணில் பட்டவை என்ன? கடலில் ஏதாவது மாற்றம் இருந்ததா? அன்றைய தினம் கடல் எப்படி இருந்தது? என்பன பற்றிய விபரங்களை அறிவதற்காக கடலுக்குச் சென்று சுனாமி அலைகள் தாக்கிய சில நிமிடங்களில் கரையை வந்தடைந்த மீன்பிடித் தொழிலாளி ஒருவரைச் சந்தித்தோம். அவர் கூறுகின்ற உண்மைக் கதைகளை அடுத்த பகுதியில் தருகின்றோம்.

□

தொடரும்



அலகாபாத்தில் அருகே உள்ள சங்கம் பகுதியில் கங்கை, யமுனை, சரஸ்வதி நதிகள் சந்திக்கும் இடத்தில் நேற்று முன்தினம் தை அமாவாசையை யொட்டி பக்தர்கள் சிறப்பு நீராடி, இறந்து போன மூதாதையர்களுக்கு தர்ப்பணம் செய்தனர். பக்தர்கள் நீராடியதை படத்தில் காணலாம்.

# கடல் மட்டம் உயர்வடைந்து வருவதால் மீண்டும் சுனாமி தாக்கும் வாய்ப்புள்ளது!

### -சர்வதேச வானிலை ஆராய்ச்சி நிபுணர் எச்சரிக்கை

மீண்டும் சுனாமி தாக்குவதற்கான நேரம் நெருங்கி வருவதாக வானிலை ஆராய்ச்சி நிபுணர் அபாய எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த டிசம்பர் 26ஆம் திகதி அன்று ஏற்பட்ட சுனாமி பேரலைத் தாக்குதலில் தமிழ்நாடு உட்பட தென் இந்தியா மற்றும் தெற்காசிய நாடுகளில் பேரழிவு ஏற்பட்டது. அதன் தாக்கத்திலிருந்து இன்னும் முழுமையாக விடுபடாத நிலையில், மீண்டும் அதே போன்ற சுனாமித் தாக்குதல் நெருங்கி வருவதாக சர்வதேச வானிலை ஆராய்ச்சி நிபுணர் தேவ்கிரிக்ஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார். கல்கத்தா 'பிரிட்டிஷ் கவுன்சில்' சார்பில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்ட கிரிக்ஸ் ஹேட்லி வானிலை ஆராய்ச்சி மையத்தின் இயக்குனராக பதவி வகித்து வருகிறார். நிருபர்களுக்கு அளித்த பேட்டியின் போது கிரிக்ஸ் கூறியதாவது: மீண்டும், ஒரு சுனாமி தாக்குதலை நாம் சந்திக்க வேண்டிய நேரம் நெருங்கி வருகிறது. எப்போது இந்த தாக்குதல் இருக்கும் என்பதை உறுதியாகக் கூற முடியாது என்றாலும், கடல் மட்டம் உயர்ந்து வருவது அடுத்த சுனாமித் தாக்குதல் நிச்சயம் என்பதற்கு கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது. கடல் மட்டம் உயருகின்றது எனறாலே புயல் போன்ற சமயங்களில் அலைகளின் உயரமும், வேக மும் அதிகரிக்கும் அடுத்த 50 ஆண்டு கலத்துக்குள், வங்காள விரிகுடா கடல் விரிவடைந்து கல்கத்தாவை மிக நெருங்கி வந்துவிடும். கடந்த 1990ஆம் ஆண்டில் இருந்து உலகின் வெப்பநிலை 0.7 பாகை செண்டிகிரேட் உயர்ந்துள்ளது. கார்பன்டை ஆக்சைடு வெளியேற்றம் 12 மடங்கு அதிகரித்துள்ளது. 2045 ஆம் ஆண்டில் உலகின் வெப்பநிலை 2 பாகை செண்டிகிரேட் அளவுக்கு உயரக்கூடும் இதன் மூலம் உலக அளவில் ஒரு மீற்றர் அளவுக்கு கடல் மட்டம் அதிகரிக்கும். இதனால் வங்களாதசத்தின் 30 சதவீதம், தெற்கு வங்காளம் உட்பட இந்திய கடலோரத்தில் பெரும் பகுதியை கடல் விழுங்கிவிடும் .ஆபத்து உள்ளது. இவ்வாறு வானிலை ஆராய்ச்சி நிபுணர் தேவ்கிரிக்ஸ் கூறினார்.

### வீரப்பன் சித்திரவதை செய்து கொல்லப்பட்டார்.

# மனைவியின் வாதத்தை ஏற்று உயர்நீதி மன்று அதிரடிப் படை மீது வழக்குப் பதிவு செய்ய உத்தரவு

(சென்னை)

சந்தனக் கடத்தல் வீரப்பன் சுட்டுக்கொல்லப்பட்ட விவகாரம் தொடர்பாக விஜயகுமார் தலைமையிலான அதிரடிப்படை மீது வழக்குப் பதிவு செய்யுமாறு தர்ம புரி காவல் நிலையத்திற்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி தாக்கல் செய்த மனுவில் தமது கணவனைப் பிடித்து அதிரடிப்படையினர் சித்திரவதை செய்த தாகக் கூறியுள்ளார். அத்துடன் துப்பாக்கிச் சண்டையில் கொல்லப்பட்டார் என்று அதிரடிப் படை கூறுவது பொய் என்றும் இது பற்றிய தனது புகாரை தர்ம புரி காவல் நிலையம் பதிவு செய்ய மறுத்து விட்டதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதிரடிப்படை மீது கொலை வழக்குப் பதிவு செய்வதுடன் சி.பி.ஐ விசாரணைக்கும் உத்தரவிட வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார். இது தொடர்பாக திங்கட்கிழமை விசாரணை இடம் பெற்றுள்ளது. இதன் போது வீரப்பனின் மறைவு பற்றிய விசாரணையை ஒரு மாதத்திற்குள் முடித்து அறிக்கை தாக்கல் செய்யும்படி தர்மபுரி வருவாய்க் கோட்ட அதிகாரிக்கும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.



கவுகாத்தில் எல்லைப்பாதுகாப்பு படை வீரர்கள் போல் உடையணிந்து கஞ்சா கடத்தியவர்களை சுங்கப் பிரிவு அதிகாரிகள் மடக்கிப்பிடித்தனர். அவர்களை படத்தில் காணலாம். இவர்களிடமிருந்து 9733 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.


## 45 ஆம் நாள் நினைவு



பிறப்பு
1970
03
07

இறப்பு
2004 - 12 - 26

பிறப்பு
1994
11
24



**அருளம்பலம் சர்வேஸ்வரன்**

**சர்வேஸ்வரன் கேசவன்**

**இரு விழி ஈரம் இன்னும் காயவில்லை**
**இழந்த உம் உயிரை இதயம் ஏனோ**
**இன்னும் தாங்கவில்லை**
**இரு விழி மூடியபோதும் கடல் மடியில் - சாய்ந்தீரோ**
**ஆளாகும் வேளையில் அள்ளிச் சென்ற கடல் அலையே**
**உமது உயிரைக் காக்க அந்த தெய்வத்தாலும் முடியவில்லை**

10.02.2005 ஆம் திகதி இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி கிரிகையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் வேண்டுகிறோம்.

முகவரி:-
சி.சிவகுருநாதன்
1ஆம் கட்டை
பரந்தன்.

தகவல்:-
சி.பிரபா
(சுடர்நிமாணி)
கிளிநொச்சி.

(5714)

**யாழிற்காய் விழுதெறிந்து நின்ற ரோஜாவின்**
**26 ஆவது மலர்ந்த நினைவாய்**



யாழில்
10 . 02 . 1979
யாழிற் காய்
11 . 11 . 2001

**லெப். கேணல்**
**சிவநேசன்**
(ஜக்கோல், வெள்ளை, புரூஸ்)
**செல்லத்துரை**
**புருஷோத்தமன்**

(யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவன்
ஊரெழு மேற்கு சுன்னாகம்)

நிச்சயம் ஒரு நாள் தடையுடையும்
நீ விதைத்த விதையெங்கும் கிளை பரப்பி
விழுதெறிந்து விருட்சமாய் ஒளிவீசும்

இவருடன் வீரச்சாவடைந்த "கப்டன் - பருதியப்பன், கப்டன் - தூயோன், கப்டன் - ரூபன்" ஆகியோரையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(5635)

**நாகதம்பிரான் நல்லருள்**
**நாடெங்கும் பாலிக்குக**

**கரைச்சி**

புளியம் பொக்கணை
நாகதம்பிரான் ஆலய
வருடாந்த ஆண்டுற்சவ
பங்குனி உத்தர
பொங்கல் விழா 25 - 03 - 2005

**சம்பந்தமான ஆலோசனைக் கூட்டமும்**
**புதிய நிர்வாகத் தெரிவுக்குமான**
**அறிவித்தல்**

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டுற்சவ பங்குனி உத்தர பொங்கல் விழா ஒழுங்குகள் சம்பந்தமான ஆலோசனைக்கூட்டமும் அதனைத் தொடர்ந்து அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான பரிபாலனசபைக்கான புதிய நிர்வாகத் தெரிவும் ஆலய போஷகரும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருமான உயர் திரு.தி.இராசநாயகம் அவர்கள் தலைமையில் 11.02.2005 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும் தயவு செய்து கிளிநொச்சி மாவட்ட அனைத்து திணைக்களத் தலைவர்களையும் அரச சார்பற்ற நிறுவனப் பொறுப்பாளர்களையும் விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர்களையும் பொதுச்சபை உறுப்பினர்களையும், அடியார்கள், தொண்டர்கள் அனைவரையும் தவறாது கலந்து வேண்டியஆலோசனைகள் நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

வீ.இராமநாதன்
தலைவர்

க.வைரமுத்து
செயலாளர்

(சி11316)

## மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
## வடக்கு கிழக்கு மாகாண சபை

# போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் [கார்ப்]

## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

## "ஆஅவ" கடன் இல.2043-SRI(SF)

# கேள்வி கோரல் - இல.03

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (CAARP) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ADB") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02.இதன் பின்னகத்து தொழில் தருனராக குறிப்பிடப்படும் CAARP, கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக வவுனியா மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்டாட் பதிவு | கூறுவிலைப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | VA/CAARP/ED/02 | வ/புளியங்குளம் இந்துக்கல்லூரியில் 110'X25' இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடமும் 40'X20' விஞ்ஞான ஆய்வு கூடமும் மீள் நிர்மாணித்தல். | M6 (கட்டடம்) | 60,000.00 |
| 02 | VA/CAARP/ED/07 | வ/பன்றிக்கெய்தகுளம் அ.த.க பாடசாலையில் 110'X25' வகுப்பறைக் கட்டடம் மீள் நிர்மாணித்தல். | M7 (கட்டடம்) | 22,000.00 |
| 03 | VA/CAARP/ED/08 | வ/சேமமடு சண்முகானந்த மகாவித்தியாலயத்தில் 110'X25' இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடமும் 40'X20' விஞ்ஞான ஆய்வு கூடமும் மீள் நிர்மாணித்தல். | M6 (கட்டடம்) | 60,000.00 |
| 04 | VA/CAARP/ED/13 | வ/சுந்தரபுரம் அ.த.க.பாடசாலையில் 110'X25' வகுப்பறைக் கட்டடம் மீள் நிர்மாணித்தல். | M7 (கட்டடம்) | 20,000.00 |
| 05 | VA/CAARP/ED/14 | வ/மதியாமடு விவேகானந்தா வித்தியாலயத்தில் 110'X25' இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடம் | M7 (கட்டடம்) | 47,000.00 |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிருமாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கைதேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக ("இக்டாட்" உடன் மேற்படி M7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்ததன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படவேண்டும்.

IV. "இக்டாட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

4. பந்தி 2 இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் கேள்வி கோர முடியும். ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் CAARP வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

5. தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் மேலும் தகவலை மாவட்ட பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, வவுனியாவில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி:024- 2222589, பக்ஸ்:024-2222589, ஈமெயில்:necordva@sltnet.lk.

6. ஒப்பந்த ஆவணங்களை பெப்ரவரி 11.2005 இலிருந்து பெப்ரவரி 25,2005 வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, ரூபா ஆயிரம் (1,000/=) மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு மீது கொள்வனவு செய்யப்படலாம்.

7. முன்கூட்டியே ஒப்பந்தக் கூட்டமொன்று, இதன் NECORD அலுவலகத்தில் பெப்ரவரி 21, 2005 முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும்.

8. கேள்வி கோருவோர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறி வைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலை இடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும்.

9. அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், மாவட்ட கேள்விச்சபை, NECORD, மாவட்ட கருத்திட்ட அலுவலகம், கச்சேரி வவுனியாவிற்கு மார்ச் 2,2005 பிற்பகல் 3.00 மணிக்கு முன்பதாக கிடைக்க அனுப்பப்பட வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு. அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பாக மாட்டார்.

**சி.சண்முகம்,**
**தலைவர்,**
**மாவட்ட கேள்விச்சபை/அரசாங்க அதிபர்,**
**வவுனியா மாவட்டம்.**

(சி.11321) 10.02.2005

# பொப் வூல்மரின் குற்றச்சாட்டை மறுக்கிறார் நடுவர் பில்லிபவுடன்



நடுவர் பில்லிபவுடன் பணியாற்றிய போட்டி களிலேயே அவுஸ்திரேலியா வெற்றி பெறுகின்றது என பாகிஸ்தான் பயிற்றுநர் பொப்வூல்மர் கூறிய கருத்தை பில்லிபவுடன் நிராகரித்துள்ளார்.

பாகிஸ்தானுடனான போட்டியின்போது தன்னை யும், ஏனைய நடுவர்களையும் அவுஸ்திரேலியா அடிபணிய வைப்பதாக வூல்மர் தெரிவிப்பதை நடு வர் பில்லிபவுடன் மறுத்துள்ளார். அத்துடன் அவுஸ் திரேலிய வீரர்கள் பல முறை முறையீடு செய்து நடுவர்களை அழுத்தம் கொடுப்பதாகவும்தெரிவித்தார். எனினும் அவர்களின் அழுத்தமோ, ரசிகர்களின் முறையீடோ தன்னைக் கட்டுப்படுத்தவில்லை என்றதுடன் வீரர்களோ, ரசிகர்களோ அழுத்தம் கொடுக்க முன்பு தனது தீர்ப்பை அறிவித்து விடுவதாகவும் பில்லிபவுடன் தெரிவித்துள்ளார்.

# பாக். தொடரில் சச்சின்பங்கேற்கலாம் பயிற்சியாளர் ஜோன்ரைட் நம்பிக்கை



முழங்கை வலியால் ("டென்னிஸ் எல்போ") அவதிப்பட்டுவரும் சச்சின் டெண்டுல்கர் அடுத்த மாதம் நடைபெறும் பாகிஸ்தானுக்கு எதிரான தாய கத் தொடரில் பங்கேற்கலாம் என நம்பிக்கை தெரிவித்துள்ளார் அணியின் பயிற்றுநர் ஜோன்ரைட்.

பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் கடந்த மாதம் வரை அவர் விளையாடமுடியாத சூழ்நிலையே இருந்தது.ஆனால் தற்போது அவர் விளையாடுவார் எனத் தெரிகிறது. அதற்காக அவர் உடற்பயிற்சியைத் தொடங்கியுள்ளதாக திங்கட்கிழமை அவருடன் பேசியபோது தெரிவித்தார். அவர் அணியில் விளையாடுவதை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளோம் என்றார் ரைட் இதற்கிடையே வரும் 22ஆம் திகதி துலீப் கோப்பை போட்டியில் அவர் விளையாடத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

# சிறந்த வீரராக பாவெல் நெட்வெத்

சிறந்த கால்பந்து வீரர் விருது பெறுகிறார் ஜுவென் டஸ் கழக வீரர் பாவெல் நெட் வெத். கடந்த ஆண்டுக்கான செக் குடியரசின் சிறந்த கால் பந்து வீரர்களுக்கான தேர்வு நடந்தது. முடிவுகள் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டன. செக்குடியரசைச் சேர்ந்த கால் பந்து அணிகள், கழகங்கள்? பிரதிநிதிகள் மற்றும் நடுவர்கள் வாக்குப் போட்டு சிறந்த வீரர் களைத் தேர்வு செய்தனர்.

சிறந்த வீரராக ஜுவெண்டஸ் கழக அணிக்கு விளையாடும் பாவெல் நெட்வெத்தேர்வு செய் யப்பட்டார். லிவர்பூர் கழக அணிக்கு விளையாடும் மிலன் பாரோஸ், செல்சியா கழக கோல் காப்பாளர் பீட்டர் செக் ஆகி யோர் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடம் பிடித்தனர்.

# ஐ.சி.சி சுப்பர் தொடரில் விளையாட அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி தகுதி



'ஐ.சி.சி சுப்பர்தொடரில் விளை யாடும் வாய்ப்பை உறுதி செய்து கொண்டுள்ளது உலக சம்பியன் அவுஸ்திரேலியா. வரும் எப்ரல் முதலாம் திகதிக்குள் நடைபெறும் போட்டிகளின் அடிப்படையில் உலகில் தலைசிறந்து விளங்கும் அணிக்கும், ஐசிசி உலக 11 பேர் அணிக்கும் இடையே 'ஐசிசி சுப் பர் தொடர்' அவுஸ்திரேலியாவில் உள்ள மெல்பேர்னில் வரும் ஒக் ரோபர் மாதம் நடைபெறவுள் ளது.

மூன்று ஒருநாள் ஆட்டங் களும் ஒரு டெஸ்ட் போட்டியும் அதில் அடங்கும். அதில் விளை யாடப்போகும்பெருமை எந்த நாட்டு அணிக்கு என்ற ஆவல் ரசிகர்க ளிடம் மேலோங்கியிருந்தது. தற்போது அந்தவாய்ப்பை அவுஸ் திரேலியா அணி உறுதி செய்து கொண்டுள்ளதாக ஐசிசி செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது. பாகிஸ்தானுக்கு எதிரான சமீபத் திய ஒருநாள் தொடரை 2-0 என வென்றதன் மூலம் அவுஸ்தி ரேலிய அணி சுப்பர் தொடரில் விளை யாடுவதற்கு வாய்ப்பை ஏற்படுத் தியுள்ளது. அத்தொடர் வெற்றி யால் கிடைத்த புள்ளிகளையும் சேர்த்து மொத்தம் 137 புள்ளி களுடன் முன்னிலை பெற்றுள்ளது அவுஸ்திரேலியா. தரநிலைப் பட்டியலில் அவுஸ்திரேலியா வைக் காட்டிலும் 17 புள்ளிகள் குறைவாக இரண்டாம் இடத்தில் உள்ளது நியூசிலாந்து. இதற் கிடையே நியூசிலாந்தில் வரும் பெப்ரவரியில் நடைபெறும் ஒரு நாள் தொடரில் ஐந்து ஆட்டங்களி லும் அவுஸ்திரேலியாவைத் தோற்கடித்துவிட்டாலும் நியூசி லாந்து அணியால் புள்ளிப்பட் டியலில் முதலிடத்தைக் கைப் பற்ற முடியாது என்ற விபரமும் உறுதியாகியுள்ளது.

# டில்லிகொமன்வெல்த்போட்டி சின்னமாக புலி அறிவிப்பு



டில்லியில் நடைபெறவுள்ள கொமனவெல்த்போட்டிகளின் சின்னமாக இந்தியாவின் தேசிய விலங்கு புலி அறிவிக்கப்பட் டுள்ளது.இத்தகவலை கொமன் வெல்த் விளையாட்டுப்போட் டிகள் கூட்டமைப்பின் தலைவர் மைக்கேல் பென்னல் டில்லியில் திங்கட்கிழமை தெரிவித்தார். இந்திய ஒலிம்பிக் சங்கத் தலை வர் சுரேஷ் கல்மாதி உடனிருந் தார்.



சிறிலங்காவுக்கு விஜயம் மேற் கொண்டுள்ள உலகின் முதல் தர பந்துவீச்சாளர்ஷேன்வோர்னுடன் சுனாமியால் பாதிப்புற்ற காலி விளையாட்டரங்கின் அழிவைப் பற்றி விளக்கமளிக்கும் முத் தையா முரளிதரன்

# இந்தியா செல்லும் பாக். அணியின் தலைவராக இன்சமாமே இருப்பார்



அண்மையில் அவுஸ்திரேலியா வுடனான டெஸ்ட் போட்டியை 3-0 என்ற வகையிலும் முக் கோணத் தொடர்இறுதிப்போட்டி யில்2-0என்றவகையிலும் தோல்வி யைச் சந்தித்த போதும் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள இந்தியா வுடனான போட்டியை எதிர் கொள்ள ஆயத்தமாகவே இருப்ப தாக பாகிஸ்தான் அணித் தலை வர் இன்சமாம்உல்ஹக் கூறியுள் ளார்.அந்தத் தொடரில் நிறைய கற்றுள்ளதாகவும் அது தமக்கு உதவி செய்யலாம் என்றும் கூறிய ஹக்,அவுஸ்திரேலிய ஆடு களங்களைவிட இந்திய ஆடு களங்கள் தமக்கு வெற்றியைத் தரும் என்றும் அவுஸ்திரேலியா வுடனான தொடரில் பங்கேற்ற வீரர்கள் மிகவும் இளம் வீரர்கள் என்று கூறியதுடன் நான்கு பேரே சற்று அனுபவவீரர்கள் எனத் தெரிவித்தார்.

இந்தியாவுடனானபோட்டியும் சற்று கடுமையாக இருப்பினும் பேர்த் போன்ற ஆடுகளம் அங்கு கிடையாது என்றார்.




# இங்கிலாந்து கால்பந்து வீரர் றூனி பலம் தொடர்பில் பெருமையடைகிறேன்

- ஸ்வன் கோரன்




இங்கிலாந்து தேசிய கால்பந்து வீரர் வெயின் றூனியின் பலத்தைப் பற்றி அணியின் பயிற்றுநர் ஸ்வன் கோரன் பெருமைப்பட்டுக் கொள்கிறார். விரைவில் ஹொலண்ட் நாட்டுடனான சிநேக பூர்வ ஆட்டமொன்றில் கலந்து கொள்ளவிருக்கும் நிலையில் அவர் இவ்வாறு பாராட்டியுள்ளார்.

கடந்த மாதம் ஸ்பெயினில் நடைபெற்ற லீக் போட்டியில் அவர் பங் கேற்கவில்லை என்பதற்காக அவரைக் குறைவாக மதிப்பிட முடியாது. பயிற்சிப் போட்டிகளில் கூட அவருக்குத் தோல்வியை பிடிக்காது. எனினும் அவரை சாந்தப்படுத்தியிருக்கிறேன்.

இவ்வாறு கூறும் எரிக்சன் பலமிக்க வீரர்களுள் அவரும் ஒருவர் அவரின் திறமை எந்த நிலையில் வெளிப்படும் என்பதை கூற முடியாது என்றார்.

# ஐந்தாண்டு இடைவெளியின் பின் டேவிஸ் கோப்பையில் அகாஸ்ஸி



ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு டேவிஸ் கோப்பை போட்டியில் பங் கேற்கிறார் அமெரிக்காவின் நட்சத்திர வீரர் ஆந்த்ரே அகாஸ்ஸி, (வயது 34) அமெரிக்க டென்னிஸ் சங்கம் இத் தகவலை வெளியிட்டுள்ளது.

வரும் மார்ச் 4முதல்-6 ஆம் திகதி வரை கார்சனில் (கலிபோர்னியா மாகா ணம்) உலக குரூப்-1 டேவிஸ் கோப்பை போட்டி நடைபெறவுள்ளது. அதில் குரோஷிய அணிக்கு எதிரான போட்டியில் விளையாடும் அமெரிக்க அணியில் (ஆன்டிரொடிக், பாப் மற்றும் மைக் பிரையன் ஜோடி) அகாஸ்ஸியும் இடம்பெறுகிறார்.



அமெரிக்காவின் முன்னணி வீராங்கனையான மார்டினா நவரத்திலோவா'ஹைதராபாத்' ஓபன் டென்னிஸ் தொடரில் பங்கேற்கிறார். இதைப் பாராட் டும் விதத்தில் இவருக்கு 'சார்மினார்' நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. இந்திய முறைப் படி சேலை கட்டி இந்தப் பரிசை பெறுகிறார் மார்ட்டினா.

# கேணல் சங்கர் வலுவூட்டல் நிலையம் கிளிநொச்சியில் திறந்து வைப்பு

கேணல் சங்கர் உடல் வலுவூட்டல் நிலையம் (Colonel Shankar Mega Gym. Body Care & Fitness Centre.) யாழ்சாலை கிளி நொச்சியில் எதிர் வரும் 19-02-2005 முதல் செயற்படவுள்ளது.


மேற்படி நிலையத்தில் பயிற்சி பெற விரும்புபவர்கள் பயிற்றுநர் வீ.தேவராஜாவுடன், இளையோர் செயற்பாட்டு நிறுவன அலு வல கத்தில் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது.



ஜப்பானில் தென்கொரிய- ஜப்பான் அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற உலகக்கிண்ண தகுதிகாண்கால்பந்து போட்டியில் ஜப்பான் 2-1 என்றகோல்எண்ணிக்கை யில் தென்கொரியாவை தோற்கடித்தது. வெற்றிபெற்ற மகிழ்ச்சியில் ஜப்பான் அணித்தலைவரைப் பாராட்டும் வீரர்கள்.

யாழ்ப்பாணம்





## சிந்தனைக்கு

எதிரி ஈவிரக்கமற்றவன், போர் வெறிகொண்டவன்,எமது தாயகத்தைச் சிதைத்து: எமது இனத்தை அழித்து விடுவதையே இலட்சியமாகக் கொண்டவன். அவனது இதயக்கதவு திறந்து எமக்கு நீதி கிடைக்குமென நாம் எதிர்பார்க்க முடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 10-02-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# யாருக்குப் பூச்சுற்றல்?

மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன், போராளிகள் மற்றும் முன்னாள் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோரின் படுகொலைகளுக்கு நொண்டிச் சாட்டுக்களையும், பூச்சுற்றும் கதைகள் கூறுவதிலும் சிறிலங்கா அரசாங்கம் இறங்கியுள்ளது. இதன் வெளிப்பாடே லெப். கேணல் கௌசல்யன் உட்பட ஏனையோரின் படுகொலைகளுக்குத் தாம் பொறுப்பற்றவர்கள் என அரசாங்கம் விளக்கம் அளிக்க முற்பட்டுள்ளமையாகும்.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்நாயக்க அன்றைய தினம், இ.கௌசல்யன் மேற்கொண்டிருந்த பயணம் குறித்து இராணுவத்தினருக்கு எந்தவித தகவலும் வழங்கப்படவில்லை. அவர் உயிரிழந்த பின்னரே தங்களுக்குத் தெரியும் என்றும் கூறியிருப்பதானது படுகொலைக்கு சந்தர்ப்பம் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்ததாகவே கொள்ளத்தக்கது.

ஏனெனில், லெப். கேணல் கௌசல்யனும் ஏனையோரும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பயணத்தை மேற்கொள்கின்றனர் என்பது இரகசியமானதொரு விடயம் அல்ல. ஏனெனில், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி ஒன்றிற்குள் பிரவேசிக்கும்போதே யார்? யார்? பயணிக்கின்றனர் என்பது இராணுவத் தரப்பில் பதியப்படுவது வழமையானதென்றே. இது சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையால் மேற்கொள்ளப்படும் பணியாகும்.

இந்நிலையில், கௌசல்யன் பயணிப்பது என்பது தங்களுக்குத் தெரியாது எனக் கூறிக்கொள்வது சிறுபிள்ளைத் தனமான விளக்கமாகும். உண்மையில் இராணுவப் பாதுகாப்புப் பெறாது புலிகளின் முக்கியஸ்தர்கள் எப்பொழுது பயணிப்பார்கள் என்று எதிர்பார்த்திருந்து சந்தர்ப்பத்தைசரியாக பயன்படுத்தி மேற்கொண்ட தாக்குதலே இதுவாகும்.

அத்தோடு, இப்படுகொலையில் இராணுவத் தரப்பிற்கு சம்பந்தம் இல்லையெனக் கூறுவதை யாரும் ஏற்றுக்கொள்வார்களேயானால், அவர்கள் பகுத்தறியும் சிந்தனை உடையவர்களாக இருக்க முடியாது. ஏனெனில், கௌசல்யனின் இராணுவக் கட்டுப்பாட்டிற்கு ஊடான மட்டக்களப்பு விஜயமும், அவர் பயணித்த பாதையும் இராணுவத் தரப்பைத் தவிர ஏனையவர்களால் உறுதி செய்வதென்பது அவர்களின் பின் தொடர்ந்தால் அன்றி இலகுவானதொரு காரியமாக இருந்திருக்க முடியாது.

ஆகையினால், கௌசல்யன் பயணம் செய்தமை குறித்துத் தகவல் தெரியாது எனக் கூறுவதும், இப்படுகொலைகளுக்கும் தமக்கும் சம்பந்தம் இல்லை எனக் கூறுவதும் நகைப்பிற்கிடமானதாகும். இதற்கும் ஒருபடி மேலாக உள்ளது கௌசல்யன் கொல்லப்பட்டமை தொடர்பாக அரசாங்கம் விடுத்துள்ள கண்டனம் ஆகும்.

இது தொடர்பாக அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், "வெலிக்கந்தைக்கு அருகில் ஏ-11 வீதியில் இடம்பெற்ற இக்கொலைகள் யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயலாகும். மனிதாபிமான விவகாரங்களில் அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஒத்துழைப்பு அதிகரித்துவரும் வேளையில் அதனைச்சீர்குலைப்பதற்கென இச்செயல் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டிருப்பது என்பது தெளிவாகப்புலனாகிறது என" அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இராணுவப் பேச்சாளரின் அறிவிப்பு சிறுபிள்ளைத் தனமானதெனின் அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் அறிக்கையானது மற்றையவர்களை மடையர்கள் ஆக்குவது போன்றுள்ளது. ஏனெனில், லெப். கேணல் கௌசல்யன் உள்ளிட்டோர் மீதான தாக்குதலை ஒரு யுத்த நிறுத்த மீறல் எனக் கூறுவதன் மூலம் அரசாங்கத் தரப்பு யாரைக் கண்டிக்க முனைகின்றது. அதாவது, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தீவிர பாதுகாப் பிற்கு உட்பட்ட பகுதியில் விடுதலைப்புலிப் போராளிகள் பலியான தாக்குதலுக்கு யார் பொறுப்பு?

யுத்த நிறுத்த உடன்பாடானது விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்கா அரசிற்கும் இடையிலானது. இதில் விடுதலைப்புலிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் கொல்லப்பட்டுள்ளனர். இப்பிரதேசத்தில் புலிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொறுப்பு அரசினுடையது? இந்நிலையில், யுத்த நிறுத்தத்தை மீறியதாக அரச தரப்பு யாரைக் குற்றம்சாட்டுகின்றது? துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானவர்களையா? அன்றி துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களையா?

ஏனெனில், துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களை குற்றம் சாட்டுவதெனில், அது அரசாங்கத்தையே குற்றம் சாட்டுவதாகும். ஏனெனில், தாக்குதல் நடத்தப்பட்டது உடன்பாட்டின் ஒரு தரப்பினரான புலிகள் மீது நடத்தப்பட்டுள்ளது. தாக்குதல் நடத்தப்பட்ட இடமும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ளது. ஆகையினால், யுத்த நிறுத்த மீறல் என்பது அரச தரப்பிற்கே பொருத்தப்பாடானதாகும். அடுத்ததாக, மனிதாபிமான விவகாரங்களில் அரசாங்கத்திற்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஒத்துழைப்பு அதிகரித்து வருவதாக அரசாங்கம் கூறிக்கொள்வதை ஊர்ஜிதம் செய்யும் தகவல்களும் இல்லை.

ஆனால், அரசாங்கத் தரப்போ, இராணுவத் தரப்போ இப்படுகொலைகளிற்கும், தமக்கும் தொடர்பில்லை என்பதற்காகச் சிறுபிள்ளைத்தனமானதும், மட்டகரமான அறிக்கைகளை வெளியிட்ட வண்ணமுள்ளது. இவர்களின் இத்தகைய பித்தலாட்டங்களை யாராவது ஏற்றுக்கொள்பவர்களாகவும், நம்புவர்களாகவும் இருப்பார்களேயானால் அவர்களும் சிறிலங்கா அரச தரப்பை ஒத்தவர்களாகவே இருக்க முடியும்.

ஈழநாதம் நாளேட்டின் நேற்றைய ஆசிரியர் தலையங்கத்தில் முதலாவது பந்தியின் இறுதியில் "இடம்பெற்றிருக்க முடியாது" என்பது "இடம்பெற்றிருக்க முடியும்' என்றும் இரண்டாவது பந்தியின் இறுதியில் "இருக்க முடியும்" என்பது"இருக்க முடியாது என்றும் தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. இத்தவறிற்காக பெரிதும் மனம் வருந்துகிறோம்.

## -அஞ்சலி நிகழ்வுகளுக்கு-

# இடையூறு விளைவிக்க முயன்ற அதிரடிப்படையினர் விரட்டியடிப்பு

(மட்டக்களப்பு)

மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் அவரோடு வீரச்சாவடைந்த நான்கு போராளிகள், அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் நாட்டுப் பாற்றாளருமான சந்திரநேரு ஆகியோரின் இறுதி நிகழ்விற்கான அறிவித்தலை திருக்கோவில் பிரதேச காயத்திரி கிராம மண்டான் பிரிவில் உள்ள நலன்புரி நிலையங்களுக்கு அருகே ஒலிபெருக்கி மூலம் அறிவித்துக் கொண்டிருந்தவேளை இந்த நலன்புரிநிலையத்திலுள்ள சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் வாகனத்திலுள்ள ஒலிபெருக்கிகளை நிறுத்தவேண்டுமெனக் கூறி வற்புறுத்தியதை அடுத்து நலன்புரி நிலையத்திலுள்ள மக்கள் அதிரடிப்படையினருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ததுடன் அங்கிருந்து சிங்கள இராணுவத்தினர் வெளியேற வேண்டும் எனக் கூச்சலிட்டனர்.

இதேவேளை தமிழர் தாயகமே இன்று சோகத்தில் மூழ்கி துக்க தினம் அனுஷ்டித்துக் கொண்டிருக்கும் வேளையில் நலன்புரி நிலையங்களில் சினிமாப்பாடல் களையும், திரைப்படங்களையும் போட்டு, பாதிக்கப்பட்ட நலன்புரி நிலையங்களில் இருக்கின்ற மக்களை மேலும் புண்படுத்துகின்ற செயலில் அதிரடிப்படையினர் ஈடுபட்டுள்ளனர். பாதுகாப்பு என்ற போர்வையில் நலன்புரி நிலையத்திலுள்ள பெண்களிடம் சேட்டை புரிவதற்காகவே இவர்கள் இங்குள்ளனர். இவர்கள் இந்த இடத்தை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என்று ஆர்ப்பாட்டக் கோசம் எழுப்பியதுடன் சிங்கள இராணுவத்தினரை ஒருகிலோ மீற்றர் தூரம் வரை விரட்டித் துரத்தியுள்ளனர்.

# நோர்வே தூதுவரிடம் ஹக்கீம் படுகொலைக்குக் கண்டனம் தெரிவிப்பு

நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் நேற்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமை சந்தித்தார். இந்த சந்திப்பு பிற்பகலில் ரவூப் ஹக்கீமின் இல்லத்தில் சுமார் ஒரு மணித்தியாலமாக இடம்பெற்றது. இதன்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை அரசியல்துறை பொறுப்பாளர் கௌசல்யனின் கொலையானது கண்டிக்கதக்கது என ஹக்கீம் தெரிவித்தார். இந்த சம்பவம் போர் நிறுத்த உடன்பாட்டைப் பாதிக்கும் அளவிற்கு சென்று விடக்கூடாது என்பதை வலியுறுத்திய அவர் இதில் தமிழீழ விடுதலைப்புலிகள் உச்சக்கட்ட பொறுமையைக் கடைபிடிக்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட தமிழ் முஸ்லிம் பிரதேசங்களை காட்டிலும் தென்னிலங்கை பகுதிகளில் புனரமைப்புப் பணிகள் துரித கதியில் இடம்பெறுகின்றன. இது தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் பாரிய தாக்கத்தை உண்டாக்கியுள்ளது. இந்த நிலையில் சுனாமியின் பின்னரான புனர மைப்புப் பணிகளுக்காக வடக்கு - கிழக்கில் இணைப்பு கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்ற விடயத்தில் ஐரோப்பிய நாடுகள் கொள்கை ஒன்றைக் கடைபிடிக்கின்ற போதும் ஜப்பான் மாற்றுக் கொள்கையை கடைபிடிக்கிறது. எனவே அது தொடர்பில் தாம் ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசியுடன் நாளை பேசவுள்ளதாகவும் ஹக்கீம் குறிப்பிட்டார்.

# லெப்.கேணல் கௌசல்யனின் படுகொலை ராணுவ உளவுப்பிரிவின் திட்டமிட்ட தாக்குதல்

-பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் கொலைசெய்யப் பட்டமைக்கு இலங்கை இராணுவத்தின் உளவுப்பிரிவின் திட்டமிட்ட தாக்குதலே காரணம் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன குற்றம் சாட்டினார். நேற்றுப் பாராளுமன்றத்தில் சுனாமி பாதிப்புத் தொடர்பான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார். சுனாமியின் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் பலமிழந்து விட்டதாகவும் எனவே அவர்கள் யுத்தம் ஒன்றுக்குச் செல்ல மாட்டார்கள் என்றும் அரசாங்கம் கனவு காண்கிறது. இந்த நிலையில் இவ்வாறான கொலைச் சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறுமானால் அரசாங்கத்தின் கனவு கலைந்து போகும் நிலை ஏற்படும் என்றும் கஜேந்திரன் குறிப்பிட்டார். (32)

# ஜேர்மன் சின்னமுத்து தடுப்பு மருந்து வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கொடிய ஜேர்மன் சின்னமுத்து நோயிலிருந்து பாதுகாக்கும் வகையில் ஜேர்மன் சின்னமுத்து தடுப்பு மருந் தினை வழங்கும் நடவடிக் கையினை கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே கடந்த காலங்களில் மேற்படி தடுப்பு மருந்தினை பெறத் தவறிய 14 வயது தொடக்கம் 44 வயதிற்குட்பட்ட பெண்கள் அனைவரையும் இன்று பின்வரும் நிலையங்களிற்குச் சென்று தடுப்பு மருந்தினைப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சுஜந்தன் வேண்டியுள்ளார்.

உருத்திரபுரம் வைத்தியசாலை, ஜெயந்திநகர் கிராம அபிவிருத்திச் சங்கம், உதயநகர் கிராமஅபிவி ருத்திச் சங்கம், கனகாம்பிகைக் குளம் ஆரம்ப சுகாதார நிலையம், மலையாளபுரம் பொது மண்டபம், அம்பாள்குளம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம், கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, திருவையாறு கிராம அபிவிருத்திச் சங்கம். (சோ)

# குழந்தையின் பெற்றோரை தீர்மானிக்கும் மரபணுச் சோதனைக்கு இரத்த மாதிரி பெறப்பட்டது

குழந்தை இல .81 என்ற சர்ச்சைக்குரிய குழந்தையின் பெற்றோரைத் தீர்மானிக்கும் வகையில் மரபணுப் பரிசோதனை தொடர்பாக நேற்றுக்காலை இரத்தம் எடுத்துக் கொள்ளப்பட்டதாக மாயாகுணசேகர தெரிவித்துள்ளார். குழந்தையின் இரத்தமும், குழந்தைக்கு உரிமை கோருபவர்களது இரத்தமும் பரிசோதனைக்காக எடுத்துக் கெள்ளப்பட்டது. வைத்தியர் மாயா குணசேகர இது பற்றித் தெரிவிக்கையில்.இரத்தம் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதாகவும் மரபணு தொடர்பாக இரத்த அறிக்கை 7நாட்களுள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

# அவசர நிலை நீடிப்பு வெள்ளியன்று விவாதம்

சுனாமிப் பேரலையின் காரணமாகப் பாதிக்கப்பட்ட 14 மாவட்டங்களில் அவசரகால நிலையை நீடிப்பது தொடர்பான விவாதம் நாளை வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளது. நேற்றுப்பாராளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது. சுனாமி கடல் அலை பாதிப்பின் பின்னர் சனாதிபதியினால் அந்த அவசரகாலச் சட்டம் நாட்டின் 14 மாவட்டங்களில் அமுலாகும் வகையில் பிறப்பிக்கப்பட்டது. இலங்கை யாப்பின் 155 ஆவது சரத்தின் படி அவசரகாலச் சட்டமானது அமுல் செய்யப்பட பாராளுமன்றத்தின் அனுமதி தேவையாகும். அந்த சட்டத்தை நீடிக்கவேண்டுமானால் 14 நாட்களுக்கு ஒருமுறை பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என்பதும் இலங்கை யாப்பின்படி தெரிவிக்கப்பட்ட விடயமாகும்.



துக்கதினமான நேற்றுத் திருமலையில் இடம்பெற்ற கதவடைப்பையும்; தமிழீழத் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டிருப்பதையும் படங்களில் காணலாம்

## இளவரசர் சார்ள்ஸ் இலங்கை வருகிறார்

வேல்ஸ் இளவரசர் சார்ள்ஸ் வருகிற 28ஆம் திகதி சிறிங்காவுக்கு விஜயமொன்றை மேற்கொள்ள வுள்ளார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஓரிரு பகுதிகளை நேரிற் சென்று பார்வையிடவுள்ள இளவரசர், இங்கிலாந்து மன்னர் பரம்பரையின் சார்பில் புனர்நிர்மாணப் பணிகளுக்கு தனது உதவிகளையும் வழங்குவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறிலங்காவின் எந்தப் பகுதிக்குச் செல்லவுள்ளார் என்பது இதுவரை முடிவுசெய்யப்பட வில்லை என்றும், 28ஆம் திகதி மீண்டும் அங்கிருந்து புறப்பட்டு அவுஸ்தி ரேலியா செல்லும் அவர், பிஜி, நியூசிலாந்து போன்ற பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொள்ள வுள்ளதாகத் தெரியவருகிறது.

### கௌசல்யன்...

மூழ்கியுள்ளது. இதேவேளை நேற்று கண்டு மணிமகா வித்தியாலய மண்டபத்திலிருந்து நேரடியாகப் பட்டிருப்புப் பாலம் வழியாக அம்பாறை மாவட்டத்திற்கு வித்துடல்கள் எடுத்துச் செல்லப்பட்டன. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து பட்டிருப்புப் பாலம் ஊடாக வித்துடல்கள் அம்பாறை மாவட்டம் திருக்கோவிலுக்கு நேரடியாக எடுத்துச் செல்லப்பட்டது.

இடையில் காரைதீவு சாரதா வித்தியாலயத்தில் பொதுமக்களின் வணக்கத்திற்காக வைக்கப்பட்டு பின்னர் திருக்கோவிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விநாயக புரம் மகாவித்தியாலயத்தில் வணக் கத்திற்காக வைக்கப்பட்டது.

வித்துடல்கள் சென்ற வீதிகளின் இரு மருங்கிலும் மக்கள் கூடி நின்று தமது வணக் கத்தினைச் செலுத்தினார்கள்.

அதேபோன்று வித்துடல்கள் வைக்கப்பட்டிருந்த இடங்களிலும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து தமது இறுதி வணக்கத்தைச் செலுத்தினார்கள். அந்தப் பிரதேசம் எங்கும ஒரே சோகமயமாகக் காட்சியளித்தது.

பின்னர் வித்துடல்கள் அக்கரைப்பற்றிற்கு எடுத்து வரப்பட்டு அங்கு கலாச்சார மண்டபத்தில் வணக்கத்திற்காக வைக்கப்பட்டு. இதன் பின்பு கல்முனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பொதுமக்களின் வணக்கத்திற்காக வைக்கப்பட்ட பின்பு அங்கிருந்து களுவாஞ்சிக்குடிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இன்று அங்கிருந்து நேரடியாக மட்டக்களப்பு நகரிலுள்ள அரசியல் துறைப் பணிமனைக்கு எடுத்து வரப்பட்டு பொதுமக்களின் வணக்கத் திற்காக வைக்கப்பட்டு கிரானுக்கு கொண்டு செல்லப்படும்.

பின்னார் அங்கிருந்து கொடுவாமடு பாலம் ஊடாக விடுதலைப் புலிகளின் கட்டுபாட்டு பிரதேசத்திலுள்ள கிராமங்களுக்கு மீண்டும் கொண்டு செல்லப்படும்.

விடுதலைப்புலிகளின் தளங்களில் பொதுமக்களின் வணக்கத்திற்காக வைக்கப்பட்ட பின்பு இன்று மாலை தாண்டியடி மாவீரர் துயலும் இல்லத்தில் வித்துடல்கள் விதைக்கப்படும் இதேவேளை நேற்றுக் கிழக்கில் பூரண கதவடைப்பு இடம்பெற்றது.பல் வேறு பொது அமைப்புக்களினால் இந்த , கடையடைப்பிற்கான அழைப்பு விடுக்கப்பட்டது. மட்டக் களப்பு, அம்பாறை, திருகோண மலை மாவட்டங்களில் கறுப்பு, வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டும், வீரவணக்கப் பதாகைகள் கட்டப்பட்டும், பொது இடங்களில் சோக கீதம் ஒலிக்கப்பட்டும் துக்க நாள் கடைப்பிடிக்கப்படுகின்றது. இம் மாவட்டங்களில் பாடசாலைகள் இயங்கவில்லை. அரசாங்க, தனியார் அலுவலகங்கள், நீதிமன்றங்களின் அலுவல்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வீதிகளில் வாகனப் போக்குவரத்து சேவைகள் நடைபெற வில்லை. சந்தைகள், கடைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. இதேவேளை வடக்கில் இரண்டாவது நாளான நேற்றும் துக்கம் அனுஷ்டிக் கப்பட்டது கறுப்புக் கொடிகளும்,சிவப்பு, மஞ்சள் கொடிகளும பரவலாகக் கட்டப்பட்டு சோக கீதங்களும் இசைக்கப்பட்டன (32)

## விஷேட மருத்துவ சிகிச்சையும் ஆலோசனையும் வழங்கல்

அவுஸ்திரேலிய தமிழர் மருத்துவ உதவிநிதியத் (TAM - MED - AID) திலிருந்து வருகை தந்திருக்கும். இருதய சிகிச்சை நிபுணராலும் ( Cardiologist) குருதி மற்றும் குருதிப் புற்றுநோய் தொடர்பான மருத்துவ கிசிச்சையாளராலும் (Haemotoligist) வருகிற சனி,ஞாயிறு (12.02.2005, 13.02.2005) தினங்கள் கிளிநெச்சி டாக்டர் பொன்னம்பலம் மருத்துவ மனையிலும், (14.02.2005, 15.02.2005) திங்கள், செவ்வாய் ஆகிய நாட்களில் புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் மருத்துவமனையிலும், காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணிவரை ஆலோசனையும், சிகிச்சையும் நடபெறும். பயன்பெற விரும்பும் நோயாளிகள் வெளி நோயாளர் பிரிவுடன் (O.P.D) தொடர்புகொள்ளவும்.

## கிரேக்க வைத்தியக் கப்பலுக்கு நோயாளர்களை அனுப்ப இராணுவம் முட்டுக்கட்டை

திருகோணமலைத் துறைமுகம் வந்துள்ள கிரேக்க நாட்டு மிதக்கும் வைத்தியக் கப்பல் தொடர்பில் சர்ச்சை தொடர்கிறது.திருகோணமலை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக கடந்த சனிக்கிழமையன்று இந்தக் கப்பல் திருகோணமலைக்கு வந்தது. இந்தக் கப்பலில் உள்ள வைத்திய சாலையில் நோயாளிகளைப் பரிசோதிக்கும் நடவடிக்கைகள் கடந்த திங்கள் முதல் ஆரம்பமாக விருந்தது. எனினும் பாதுகாப்புக காரணங் களை காட்டி இந்த வைத்தியசாலைக்கு நோயாளிகளை வேறொரு வைத்திய சாலையின் பரிந்துரை இன்றி நேரடியாக அனுமதிக்க முடியாது என இராணுவம் கூறி வருவதன் காரணமாக இந்தச் சிகிச்சைகளை ஆரம்பிக்க முடியவில்லை என இலங்கைக்கான கிரேக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்

இருநாட்டு அதிகாரிகளும் இணங்கிக்கொண்டமைக்கு ஏற்பவே அதில் குறிப்பிட்ட கப்பலில் வைத்தியசாலை ஒன்று அமைக்கப்பட்டு இலங்கைக்கு எடுத்து வரப்பட்டது. இந்த நிலையில் தற்சமயம் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பாக தாம் இலங்கை அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டுள்ள தாகவும அவர் குறிப்பிட்டுள்ளார் .இதே வேளை இந்த விடயம் தொடர்பில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரட்னாயக்கவின் கருத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சித்த போதும் அவருக்கு இந்த விடயமே தெரிந்திருக்கவில்லை என்பது தெரிவிக்கப்பட்டது .

### சந்திர...

உடலை அடக்கம் செய்வதற்கு மேலதிக நீதவான் அனுமதி வழங்கியுள்ளர். இச்சடலம் ஒப்படைக்கப்படுவதற்கு 36 மணித்தியாலங்கள் எடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதலில் நேற்றைய தினம் இவரது மரண விசாரணையை நடத்து மாறு கொழும்பு நீதி மன்ற நீதவான் உத்தரவிட்டதை யடுத்து மரண விசாரணையின் பின்னர் சந்திரநேருவின் உடல் உறவினரிடம் கையளிக்கப்பட்டது.

இதன் போது நடைபெற்ற மரண விசாரணையின்போது மேலதிக நீதவான் முன்னிலையில் உறவினர்கள் விசேட வாக்குமூலத்தையும் வழங்கினர்.

இதனையடுத்தே மேலதிக நீதவான் உடலை அடக்கம் செய்வதற்கான அனுமதியை உறவினர்களுக்கு வழங்கினார்.

### படுகொலை...

பகுதியில் ஆரம்பமாகி வாகரை பிரதேச செயலகத்தை சென்றடையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பேரணி முடிவில் சனாதிபதிக்கான மகஜர் ஒன்று கையளிக்கப்பட உள்ளது இந்த மகஜரை பொது அமைப்பகளின் பிரதிநிதி ஒருவர் கையளிக்க உள்ளதாகவும் மட்டக்களப்பு செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

### சபாநாயகர்...

யடுத்து பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க விசேட உரையொன்றை ஆற்றினார். இதனையடுத்து மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் மட்டக்களப்பு- அம்பாறை மாவட்ட அரசி யல்த்துறைப்பொறுப்பாளர் கௌசல்யனின் படுகொலை சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தும் எனவும் கூறியுள்ளார். இந்தப் படுகொலைச சம்பவமானது சமாதான நடவடிக் கைகளை தோல்வியடையச் செய்வதற்கு எடுக்கப்படும் முயற்சி எனவும் கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கருத்து வெளியிடுகையில்,

இந்தப்படுகொலைச் சம்பவத்திற்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் எனத் தெரிவித் துள்ளா. அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இராணுவ முகாம்கள் இரண்டிற்கு இடைப்பட்டபகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமையே இதற்கான காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### புலிகளின்..

வே.பாலகுமாரன், தளபதி நாகேஸ் ஆகியோர் புறப்பட்டுச் சென்றனர்.

நேற்று மாலை 5.00 மணியளவில் கரடியனாறு மகாவித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தில் இறங்கிய இவர்கள் அப்பிலாந்தோட்டையிலுள்ள இல்லத்தில் லெப். கேணல் கௌசல்யனின் துனைவியார் புஸ்பா அவர்களை சந்தித்தனர். பின்னர் பண்டாரிய வெளியிலுள்ள அவரது தாயா ரைச் சந்தித்தனர். கௌசல்யன் 2004 ஆண்டு மார்ச் 22 திகதி திருமணம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக மட்டக்களப்பு செல்லும் வழியில் திருமலை சம்பூரில் தறையிறங்கிய தமிழ்ச் செல்வன் தலைமையிலான குழு திருமலை மாவட்ட அரசியல் துறைப பொறுப்பாளர் எழிலனைச் சந்தித்தனர் (சோ.கு)

## நீரில் மூழ்கி மரணம்

சுனாமி நிவாரணப் பணிகளுக்கு கனடாவிலிருந்து வருகைதந்திருந்த பெண் ஒருவர் திருகோணமலை கடலில் மூழ்கி இறந்துள்ளதாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர். சோனியா மகியூஸ் என்ற இப் பெண் ஜேர்மனியர் ஒருவருடனும் இலங்கையைச் சேர்ந்த தமிழ் மொழி பெயர்ப்பாளர் ஒரு வருடனும் கடலில் நீந்திக் கொண்டிருந்தவேளை கடுமையான நீரோட்டத்தில் சிக்கிக் கொண்டனர்.

இவர்கள் இருவரும் தப்பி திருகோணமலை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கனடாவைச் சேர்ந்த பெண் கடலில் மூழ்கி இறந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

இவர் எந்த நிறுவனத்தினூடாக நிவாரணப் பணிக்கு வந்திருந்தார் என்பது தெரியவரவில்லை என்றும் பொலிசார் கூறினர்.

### கிளியில்...

பாடசாலை, பளை- பளை மத்திய கல்லூரி, பூநகரி-வாடியடி, விசுவமடு- தருமபுரம் ம.வி, முழங்காவில்- மாவீரர் மண்டபம் மேலும் அரச படைகளின் இக்கொடூர செயற்பாடுகளைக் கண்டித்து மாவட்டம் தழுவிய மாபெரும் கண்டன எதிர்ப்பு நிகழ்வை எதிர்வரும் 15-02-2005 செய்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட வெகுசன அமைப்பின் ஏற்பாட்டில் நடாத்துவதாக தீர்மானிக்கப்பட்டது.

## கண்ணீர் அஞ்சலி



நவரட்ணம் மகேஸ்வரி

பிறப்பு 03-07-1941

இறப்பு 09-02-2005

பேரிகை அமைப்பின் நிர்வாகசபை உறுப்பினரும் பிரபலபாடகருமான திரு.நவரட்ணம் யுவராஜா அவர்களின் அன்புத் தாயார் திருமதி நவரட்ணம் மகேஸ்வரி அவர்கள் 09.02.2005 அன்று இயற்கை எய்தியுள்ளார். அன்னாரது குடும்பத்தினருக்கு பேரிகை அமைப்பின் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக் கிறோம்.

பேரிகை-
சமூககலை
இலக்கிய அமைப்பு,
கிளிநொச்சி.

(5717)

## 45ஆம் நினைவஞ்சலி

ஆழிப்பேரலையில் ஆழ்ந்து சென்ற
எமது வித்தியாலய தரம் 5 மாணவன்
அமரர்
செல்வன் சர்வேஸ்வரன் கேசவன்
அவர்களின்
குடும்பத்தினருடன் துயர் பகிர்ந்து அன்னாரின்
ஆன்ம சாந்தி வேண்டி இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

கல்வீச் சமூகம்
கிளி/முருகானந்த மகாவித்தியாலயம்,
முரசுமோட்டை.

(5716)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது